பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 25 திங்கட்கிழமை (08-03-2004) தொலைபேசி - 2223378 ஒலி 80




# கருணாவின் தனிப்பட்ட முடிவு ஒருபோதும் வெற்றியளிக்காது

## புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவிப்பு

(லண்டன்)

**கருணாவின் துரோகத்தனத்தால் மட்டு-அம்பாறைக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்து தமிழ்த் தேசிய விசுவாசத்தை சொற்பகாலத்திலேயே அம்மக்கள் நிருபிப்பார்கள்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்குப் பிராந்திய மூத்த உறுப்பினரும், முன்னாள் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளருமான கரிகாலன் தெரிவித்துள்ளார்.**

ஐ.பி.சி. வானொலிக்கு நேற்றைய தினம் வழங்கிய பேட்டியின்போதே கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் வழங்கிய பேட்டியின் முழுமையான விபரம் வருமாறு:

கேள்வி: கருணா எடுத்த முடிவு தன்னிச்சையான முடிவு என்று சொன்னீர்கள். அது குறித்து..?

பதில் ஆம் கருணா இந்த முடிவை எடுப்பதற்கு முன்னர் எமது மாவட்டத்தில் இருக்கின்ற தளபதிகளையோ பொறுப்பாளர்களையோ கலந்து ஆலோசிக்கவில்லை.

தலைவர் இட்ட கட்டளையை தானாகவே ஏற்றுக்கொள்ளாது அந்தக் கட்டளையை மீறுவதாக எங்களிடம் தெரிவித்திருந்தார்.

எனது போராட்ட வாழ்க்கையில் இன்றைக்குத்தான் தலைவரது கட்டளையை மீறிப் போகிறேன் என்று கூறிக்கொண்டு தலைவரது கட்டளைக்கு எதிரான ஒரு முடிவை அவர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து நாங்கள் பல தடவைகள், பல தளபதிகளும் பல பொறுப்பாளர்களும் அவருக்கு எடுத்து விளக்கினோம். ஆனால் அவர் எந்த ஒரு ஆலோசனைக்கும் செவி சாய்க்கவில்லை.

அப்போது, நாங்கள் கூறிய ஆலோசனைகள் எல்லாம் ஒரு போலித்தனமான ஆலோசனையாகவோ ஒரு கையாலாகத்தனமான ஒரு முடிவுகளாகவும்தான் அவர் பார்த்துக்கொண்டாரே தவிர யதார்த்த பூர்வமாக ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்கிற அணுகுமுறைகள் அவரிடம் இருக்கவில்லை.

தலைவருடையை கட்டளையை ஏற்று அதற்கேற்றவாறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகிற மனோநிலையிலும் அவர் இருக்கவில்லை.

ஆகவே, எங்களுடைய தளபதிகளுடையதும், பொறுப்பாளர்களுடையதும் கருத்துகளைக் கேட்காமல் தானே ஒரு முடிவை எடுத்துக் கொண்டு அதை எமது போராளிகள், தளபதிகள், எமது மாவட்ட மக்கள் மீதும் திணித்து இருக்கின்றார்.



இதன்மூலம் அவர் ஒரு தன்னிச்சையான முடிவை எடுத்து அதை இன்று நடைமுறைப்படுத்த விளைகிறார் என்று நாங்கள் கருதுகிறோம்.

கேள்வி: கருணா தன்னிச்சையாக முடிவு எடுக்க என்ன காரணம்?

பதில் அவர் எங்களுடைய ஆலோசனைகளை எல்லாம் கேட்காது தலைவரது கட்டளைகளை நிறைவேற்ற விரும்பாது தானே ஒரு குழப்பமான முடிவை எடுப்பதற்கு பின்னணியில் நின்று ஏதோ ஒரு சக்தி செயல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள், பொதுமக்களுக்கு அசம்பாவிதம் எதுவும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க பிரபா உத்தரவு

(லண்டன்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பொதுமக்களுக்கும்,விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் எந்தவிதமான தீங்கும் ஏற்படாதவாறு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மட்டு-அம்பாறை மாவட்டத்தின் புதிய தளபதியாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் ரமேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கும் தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்டிருக்கும் கருணாவுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக நிலைபெறும் சூழ்நிலையை கவனமாகவும் மிகவும் நிதானத்துடனும் கையாளுமாறு தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிழக்கில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைக்கு மிக விரைவில் தீர்வுகாணும் நோக்கில் அதற்கேற்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சி வருகின்றனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைகளை சுமூக நிலைக்குக் கொண்டு வரும் வகையில் மட்டக்களப்பிலிருந்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

மட்டக்களப்புமறை மாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 4 மணியளவில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூடி அங்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைகுறித்து ஆராய்ந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலையையும் அங்கு ஏற்பட்டுள்ள முரண்பாடான நிலைமைகளுக்கும் இணக்கமான சாத்தியமான தீர்வுகளைக் காணும்பொருட்டு பொது அமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் இன்று கிளிநொச்சி வருகைதருகின்றனர்.

கிளிநொச்சியில் இடம்பெறும் சந்திப்பில் கிழக்கில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிநிலை குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.(த)

மூத்த தலைவருடன் இளைஞர்களின் விடிவிற்காய்
புதிய எண்ணங்களுடன் புறப்படும் இளைய தலைமுறை

"உணர்வுகளை மதித்து உரிமையுடன் வாழ்வோம்"



வீ.ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி
(முதன்மை வேட்பாளர்)
இல. X

(சி-7413)

சுயேச்சைக்குழு - 01



திரு.ச.அரவிந்தன்
(தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழு உறுப்பினரும், முன்னாள் மாநகரசபை உறுப்பினரும்)
இல. X



மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்!
அரசியல் பன்மைத்துவம் பேணப்படவேண்டும்!
சொந்த மண்ணில் சுகவாழ்வு காண!
மக்களே வீணைக்கே வாக்களியுங்கள்!!!




X

(8504)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



சைவ மாநாட்டின் மூன்றாம்நாள் நிகழ்வில் தலைவர் திரு.க.சிவராமலிங்கம் உரைநிகழ்த்துவதை படத்தில் காணலாம்.





யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் ஆகியோர் எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக சிற்றூர்தி, முச்சக்கரவண்டி போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினர். அதன் போது பிடிக்கப்பட்ட படங்கள்.





மகளிர் அபிவிருத்தி நிலையமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய மகளிர்தின விழாவின்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மகளிர் தயாரிப்புப் பொருட்களைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:- ஐங்கரன்)

# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல்கள்~2004

## தேர்தல் மாவட்டம் இல. 10-யாழ்ப்பாணம்.

### உடற்றகுதியீனம் உள்ளோர் பிரத்தியேக போக்குவரத்து வசதிக்காக விண்ணப்பித்தல் - பிரிவு 83/4(4)ஈ

உடற்றகுதியீனம் உற்றவர் அல்லது அவர் சார்பாக வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் 2004.03.25ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது உடற்றகுதியீனம் பற்றிய விண்ணப்பத்தை எனக்கு அனுப்பிவைக்கவேண்டும். இவ் விண்ணப்பப் படிவங்களை தேர்தல்கள் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தவிர்க்கமுடியாவிடத்து இத்துடன் பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணபத்திற்கு அமைய தயாரித்து விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பத்துடன் பதிவுசெய்யப்பட்ட வைத்தியரின் அறிக்கை அல்லது ஆயுள்வேத வைத்தியரின் அறிக்கை அல்லது தனியார் வைத்தியரின் அறிக்கை இணைக்கப்பட வேண்டும். இவ் அறிக்கையில் வைத்தியரின் பெயர், பதிவிலக்கம் என்பன குறிப் பிடப்படல் வேண்டும்.

உடற்றகுதியீனம் உள்ள ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு நடந்தோ அன்றி ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை வாகனத்திலோ செல்வதற்கு இயலா தவராய் உள்ளார் என்று திருப்திப்படுமிடத்து வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற் கும், வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து திரும்பி வருவதற்கும் வாகனம் ஒன்றை உபயோகப படுத்துவதற்கான அனுமதி என்னால் வழங்கப்பபடும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 2004.03.25**

தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 10~யாழ்பாணம்.

### 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

### பாராளுமன்றத் தேர்தல் - 2004.04.02

### 83 (4) (ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கென உடற்றகுதியீனமுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

.................................................. தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு

1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விபரம்:..................................................
..................................................

(அ) முழுப் பெயர்:-..................................................

(ஆ) அஞ்சல் முகவரி:-..................................................
..................................................
..................................................

(இ)தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புபிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்):-
..................................................

2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம்:-..................................................

3) உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும்:-..................................................
..................................................
..................................................

4) இவ்விண்ணப்பத்தைப் பரிசீலனைக்கெடுப்பதற்கேதுவாக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/பதிவுசெய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின்/தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர்:..................................................

பதிவிலக்கம்:..................................................

5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/உடற்றகுதியீனம் உற்றுள்ள மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை அல்லது இலங்கை அரசாங்க புகைவண்டித் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குரத்து வசதி மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

6) மேற்குறிப்பிட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய் வருவதற்கென நான்/உடற்றகுதியீனம் உற்றமேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதுமொரு வாகனத்தை பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கிறேன்.

..................................................

திகதி:-........................

உடற்றகுதியீனமானவரின்/அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

(சி-7415)

# தமிழினத்தின் உரிமைக்குரலை உலகறியச் செய்யவேண்டும்

## கூட்டமைப்பு வேட்பாளர் கஜேந்திரன் அறைகூவல்

(மூளாய்)

தமிழ் மக்களின் உரிமைக்காகவே விடுதலைப்புலிகள் ஆயு



தப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என்பதை உலகறியச் செய்வதற்கு எதிர்வரும் தேர்தலைத் தமிழ் மக்கள் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவரும், கூட்டமைப்பின் வேட்பாளர்களுள் ஒருவருமான செ.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தில் வலி.மேற்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் க.குலசிங்கம் தலைமையில் தேர்தல் பிரசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே கஜேந்திரன் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

மகளிர் பொறுப்பாளர் மலர்விழி, பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள், போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இற்றைவரை மாறிமாறி ஆட்சிக்கு வந்த பேரினவாதிகள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்தே வந்துள்ளனர்.

இதனால் அன்றைய தமிழ்த் தலைவர்கள் செய்த அமைதி வழியான முயற்சிகள் யாவும் தோற்கடிக்கப்பட்டன. இதனால் தமிழினத்தின் தந்தையாக மதிக்கப்படும் செல்வநாயகம் "நாம் ஜனநாயக வழியில் கேட்டபோது எமது உரிமைகளைத் தர மறுக்கிறீர்கள். இதனால் தமிழ் இளைஞர்கள் ஆயுதமுனையில் தமது உரிமைகளைக் கோரும்போது அதை நீங்கள வழங்கவேண்டிய சூழ்நிலை வரும்" எனக் கூறியிருந்தார்.

அவரின் எதிர்வுகூறலின்படி விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று பேரினவாதிகளிடம் இருந்து தமிழின உரிமைகளைப் பறித்தெடுக்கும் பலத்துடன் விளங்குகிறார்கள்.

இன்று தோன்றியுள்ள தேர்தல் சூழ்நிலையில் தமிழினம் ஒன்றுபட்டு தம் உரிமைக்குரலை உலகறியச் செய்யவேண்டும் என்பதற்காகப் பாராளுமன்ற அரசியலை நம்பாத விடுதலைப்புலிகள் இன்று அதற்குத் தம் ஆதரவை வழங்குகிறார்கள். இது காலத்தினால் ஏற்பட்ட மாற்றம். இதனூடாகத் தமிழர்கள் ஜனநாயக வழியில் தோற்றதினாலேயே ஆயுதவழியில் உரிமையைப் பெற முனைந்தவர்கள் என்ற உண்மையை புலிகள் உலகறியச் செய்யலாம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

எனவே, எமது வாழ்வுரிமைக் கோரிக்கைகளின் நியாயத்தை உலகறியச் செய்யவேண்டுமாயின் இத்தேர்தலூடாக புலிகளின் ஆதரவுடன் போட்டியிடும் கூட்டமைப்பினருக்கு மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் எனக் கூறினார். (ந-50,4)

## பெண்ணுரிமைகளைப் பாதுகாக்க விரைவில் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

நாட்டின் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளில் பெண்களுக்கு உரிய அதிகாரம் வழங்குவதற்கும், அவர்களின் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கும் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையும் நீக்குவதற்கு அவர்களுக்குரிய சாசனம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென சட்டமூலமும் விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

பெண்களின் உரிமைகள் மீறப்படுவதுதொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் அது சம்பந்தமான விசாரணைகள் தொடர்பாகத் தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் நடைமுறைகளைப் பலப்படுத்துவதே இப்புதிய சட்டமூலத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (யே-60,8)

## வன்முறை வேண்டாம் டக்ளஸ் வலியுறுத்து

இந்தமுறை பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளின் போது வார்த்தைகளால் கூட வன்முறைகள் இருக்க வேண்டாம். இவ்வாறு செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் தேர்தல் பிரசார உத்திகள் தொடர்பாக விளக்கம் அளித்த செயலாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில்,

இநதத் தடவை தேர்தலின் போது எமது கட்சிககான வெற்றி வாய்ப்புக்கள் மிகவும் பிரகாசமாகவே இருக்கின்றது. நாங்கள் முன்னர் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் குறித்தும், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண முன்னெடுத்த விடயங்கள் குறித்தும் மக்களுக்கு நேரில் சென்று விளக்குவதே எமது பிரசாரப் பணியாக இருக்க வேண்டும். இதன்போது குறுக்கிடக்கூடிய நபர்கள் ஆத்திரமுறச்செய்யவும், சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கவும் முனையக்கூடும். இத்தகைய குறுக்கீடுகள், ஆத்திரமூட்டல்கள், சீண்டும் நடவடிக்கைகள் ஏதும் கண்டும் உணர்ச்சி வசப்படாமல் சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

# முரண்பட்ட அரசியல் பேச்சுக்களை ஒளி, ஒலிபரப்புச் செய்ய வேண்டாம்

## தேர்தல் ஆணையாளர் கண்டிப்பான உத்தரவு

(கொழும்பு)

எந்வொரு கட்சிக்கும், இனத்துக்கும், மதத்துக்கும் எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தும் அரசியல் பேச்சுக்களை ஒலி,ஒளிபரப்புவதை தவிர்க்குமாறு அரச இலத்திரனியல் ஊடகங்களுக்கு தேர்தல் ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விதிமுறைகளைப் பின்பற்றாத பேச்சுக்களை திருத்தியமைத்து அல்லது மாற்றம் செய்து ஒலி, ஒளிபரப்ப வேண்டும் எனவும், அல்லது அத்தகைய பேச்சுக்களை முற்றாக நிராகரிக்குமாறும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு தேர்தல் ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் குறித்த நிகழ்ச்சிகள், செய்திகள் ஆகியவற்றை இந்த நிறுவனங்களின் பணிப்பாளர்கள் கவனமாக பரிசீலித்து, முரண்பாடுகள் காணப்படும் விடயங்கள் குறித்து தம்முடன் கலந்தாலோசித்து, அவை எந்தவொரு கட்சிக்கோ, வேட்பாளருக்கோ சார்பானவையாக இல்லாதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் தேர்தல் ஆணையாளர் கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார். (உ)

# அரச நிகழ்வுகளை ரத்துச்செய்த இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம்

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலுக்கான நடத்தைநெறி அமுலில் இருக்கும் வரை அடுத்த 6 வாரங்களுக்கு தமது எல்லா நிகழ்ச்சிகளையும் அரச விழாக்களையும் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ரத்துச் செய்துவிட்டார்.

ஒரு எச்சரிக்கை உணர்வோடு குடியரசுத் தலைவர் தமக்குத்தாமே இந்தக் கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

தேர்தல் நடைபெறும் வேளையில் அரசியல் தலைவர்களுடன் தாம் மேடையேறத் தோன்றினால் அதை அவர்கள் அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்பதால் டாக்டர் அப்துல்கலாம் இந்த முடிவை எடுத்துள்ளார். (யே-9)

## வாஜ்பாயை எதிர்த்து லக்னோவில் முன்னாள் மத்திய அமைச்சர் போட்டி

(புதுடில்லி)

முன்னாள் மத்திய அமைச்சரும் பிரபல சட்டத்தரணியுமான ராம் ஜித்மலானி பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து லக்னோத் தொகுதியில் போட்டியிட முன்வந்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டு வேட்பாளராக தேர்தல்களத்தில் குதிக்கத் தயார் என்று கூறிய அவர் பாரதிய ஜனதா அரசைத் தோற்கடிக்க தாம் எதுவேண்டுமானாலும் செய்யப் போவதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கந்தசிவனுடன் சேர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த ராம்ஜித்மலானி எல்லாக் கட்சிகளும் கருத்து வேறுபாடுகளை மறந்து பொதுச் செயல்திட்டத்தில் ஐக்கிய முன்னணி அமைத்து போராடவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (யே-9)

## இந்தியச் செய்திகள்

## பெண்ணுக்குச் சொத்துரிமை மறுப்பு காஷ்மீரில் காங்கிரஸ் சட்டம்

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துப் பெண்கள் வேற்று மாநிலங்களைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு சொத்துரிமை கிடையாது என்ற சட்டம் இயற்றியதற்காக காங்கிரஸை பா.ஜ.க குறைகூறியுள்ளது.

ஒரு பெண்ணின் தலைமையிலான கட்சி, இத்தகைய சட்டத்துக்கு ஆதரவு தருவது துரதிர்ஷ்டவசமானது என்று பா.ஜ.க தலைவர் வெங்கைய நாயுடு கூறினார்.(யே-9)




## ஜம்மு — காஷ்மீர் மோதல்களில் ஒரு சிவிலியன் 8 தீவிரவாதிகள் பலி

ஜம்மு - காஷ்மீரில் வெவ்வேறு சம்பவங்களில் 8 தீவிரவாதிகளும், சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டார்கள்.

புல்வாமாவில் சங்கம் அருகே கிராமம் ஒன்றில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே இரவு முழுவதும் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக ஸ்ரீநகரில் அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பெருமளவிலான ஆயுதங்களும் வெடி பொருட்களும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

ரஜோரி மாவட்டத்தில் லக்ஸரி இதெய்பா பகுதிக் கொமாண்டர் ஒருவரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றார்கள். பூஞ் மாவட்டத்தில் பலபோட்ஸ் பிரிவில் ஹால் எனும் இடத்தில் தீவிரவாதிகளுடன் நடந்த மோதலில் 3 தீவிரவாதிகளை பாதுகாப்புப்படையினர் சுட்டுக் கொன்றனர். அவர்களில் ஒருவரின் உடல் குண்டுகளால் துளைக்கப்பட்டு நேற்று முன்தினம் அனந்தினாகில் உள்ள கிராமம் ஒன்றில் கணடெடுக்கப்பட்டது. (யே-9)

# அறவாணிகளும் தேர்தலில் வாக்களிப்பு அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவு

(சென்னை)

தமிழ் நாட்டில் தேர்தலில் அறவாணிகளுக்கு (அலிகள்) வாக்களிக்க உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில் அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்மாநில மகளிர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ரஜனி என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் வெளிநாடுகளில் அறவாணிகளுக்கு சமுதாய அங்கீகாரம் வழங்கப்படுவதோடு சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளும் வழங்கப்படுகிறது என்றும், ஆனால் இந்தியாவில் அறவாணிகள் மிகக் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள் எனறும் கூறியுள்ளார்.

இவர்களுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதோடு வாக்காளர் அடையாள அட்டையும் வழங்கவும் வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமென்று மனுவில் ரஜனி கோரியுள்ளார்.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சுபாஸன் ரெட்டி, நீதிபதி ரி.சணமுகம் ஆகியோரைக்கொண்ட முதன்மை டிவிஷன் பெஞ்ச் இந்த மனுவுக்கு ஒருவார காலத்தில் அனுமதியளிக்குமாறு தமிழக அரசுக்கும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. (து)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கையே குரு

" மார்பா " என்று ஒருவர் திபேத் நாட்டில் இருந்தார். அவர் ஒரு எளிமையான ஆசாமி. அவருக்கு ஞான மார்க்கத்தில் போகவேண்டும் என்று ஆசை. அதனால் ஒரு குருவை நாடிப் போனார். " குருவே! நான் என்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள் " என்றார். " எப்போது நீ என்னிடம் சரணாகதி அடைந்துவிட்டாயோ இனிமேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நீ செய்யவேண்டியது வேறொன்றுமில்லை. என்னைப் பரிபூரணமாக நம்பு. என்பேர்தான் உனக்கு மகா மந்திரம். எந்தக் கஷ்டம் வந்தாலும் என்பேரைச் சொல். சரியாகிவிடும்" என்றார்.

உடனே இந்தச் சீடர் அவரது காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.குருநாதரின் பெயரைச் சொல்லிக்கொண்டே போனார். அவர் போவதைப் பார்த்த சிலர் மறுபடியும் குருவிடம் ஓடிவந்தனர். "குருவே... இப்போது உங்களிடம் ஆசி வாங்கிக்கொண்டு போனவர் நீர்மீதுநடந்து செல்கின்றார் " என்றனா ஆச்சரியத்துடன்.

குருவுக்கு அதைவிட ஆச்சரியம் " என்ன... தண்ணீர் மீது நடந்து போகின்றாரா என்னால் நம்பவே முடியவில்லையே" என்றார். உடனே புறப்பட்டு ஆற்றங்கரைக்குப் போனார். அங்கே அந்த ஆள் நிஜமாகவே நீர்மீது நடந்து சென்றார். பளிங்குத் தரையில் நடப்பதுபோல் அவர் போய்க்கொண்டிருந்தார். நடு ஆற்றில் நின்று நடனமாடுகிறார். ஆற்றின் இரு கரையிலும் ஏகப்பட்ட கூட்டம். எல்லோரும் இதை அதிசயமாகப் பார்த்தனர்.

குரு உடனே அந்த ஆளை கரைக்குக் கூப்பிட்டார். அவரும் வந்து சேர்ந்தார். " என்ன ரகசியம் இது? நீ எப்படி தண்ணீரில் நடந்தாய்? " என்று கேட்டார்." இதில் என்ன ரகசியம் சுவாமி... எல்லாம் உங்கள் அருள்தான். நீங்கள்தானே கூறினீர்கள் எதுவாக இருந்தாலும் என் பெயரைக் கூறு என்று. அதுதான். இங்கே வந்ததும் படகு எதுவும் கிடைக்கவில்லை. உடனே உங்கள் பெயரைக் கூறிக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன் என்றான்.

குருவினால் இதை நம்பமுடியவில்லை. " என் பெயருக்கு இவ்வளவு சக்தியா என்று ஆச்சரியம். மீண்டும் அதைச் சோதித்துப் பார்க்கவேண்டும் என்று ஆசை. " சீடனே! உனது குரு பக்தியை மெச்சினேன். நான் இப்போது உன்னை மலைமீதிருந்து கீழே குதி என்று சொன்னால் குதித்து விடுவாயா? " என்றார்.

உடனே அவர் ஒரு மலை மீது ஏறி கீழே குதித்துவிட்டார். எல்லோரும் ஓடிப்போய் பதறிக்கொண்டு அவர் குதித்த இடத்திற்குச் சென்று பார்த்தனர். அந்த சீடர் சிறு காயம் கூட இல்லாமல் நலமாக நின்றுகொண்டிருந்தார். "என்னப்பா இது... இப்போதும் என் பெயரைத்தான் கூறினாயா? " என்றார் குரு. " ஆமாம் " என்றான் சீடன். " சரி... அப்படியென்றால் இதில் ஏதோ விசயம் இருக்கிறது. அதனால் நானே சோதித்துப் பார்க்கிறேன் " என்று கூறிய குரு பக்கத்திலிருந்த குளத்தில் இறங்கித் தண்ணீர் மீது நடக்க முயற்சித்தார். அவ்வளவுதான் தொபீர் என்று உள்ளே விழுந்து நீரைக் குடிக்கத் தொடங்கிவிட்டார். எல்லோரும் கரையில் நின்று கத்த ஆரம்பித்துவிட்டனர். உடனே இந்த சீடரே நீர்மீது நடந்துபோய் அவரைக் கரைக்கு அழைத்துக் கொண்டு வந்து " என்ன ஆயிற்று சுவாமி உங்களுக்கு? " என்று கேட்டார். என்னை மன்னித்துவிடப்பா! நான் உண்மையான குரு இல்லை. நான் ஒரு போலி ஆசாமி " என்றார் குரு. " அது எப்படி சுவாமி. நீங்கள் அப்படியிருந்தால் உங்கள் பெயருக்கு இவ்வளவு சக்தியா? என்றார் இவர்.

இப்போது அந்தக் குரு சொன்னார். அப்படி இல்லை. என்பெயரில் ஒன்றுமே இல்லை. இந்த அற்புதங்களைச் செய்தது உனது நம்பிக்கை. நான் கூறியதை சந்தேகப்படாமல் முழுதாக நம்பினாய். அந்த நம்பிக்கைதான் உன் சக்திக்குக் காரணம் " என்றார். " உனக்குச் சொன்னதை நான் நம்பவில்லை. என்னையும் நான் நம்பவில்லை. அதனால் தான் தண்ணீரில் மூழ்கிப் போனேன். நான் உனக்குக் குருவாக இருக்கத் தகுதி இல்லாதவன் என்னை மன்னித்துவிடு " என்று கூறி புறப்பட்டுப்போய்விட்டாராம். இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகின்றது. நாம் வைக்கும் நம்பிக்கைதான் நமக்குக் குரு.

இந்தக் காலத்து குரு ஒருவர் சீடனிடம் சொன்னார். "எப்போதும் என் காலடியில் உட்கார்ந்திருக்கிறாயே என்ன காரணம்? " " நம்பிக்கைதான் காரணம் " என்றான் சீடன். " என்ன நம்பிக்கை ? " என்று கேட்டார் குரு. என்றாவது ஒருநாள் நீங்கள் இறந்துவிடுவீர்கள். உங்கள் இடத்திற்கு நான் வரலாம் என்ற நம்பிக்கைதான் " என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.தே. முன்னணியின் ஆட்சியில் புலிகளுக்கு 6 கப்பலில் ஆயுதம்

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் ஜயரட்ண

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் பொரும்பாலான அமைச்சர்கள் அரச சொத்துக்களை தமது உற்றார் உறவினர்களுக்கு விற்றுள்ளனர் என தபால் தொடர்பு அமைச்சர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார். மேலும் காப்புறுதிக்கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சி. டபிள்யு. இ.போன்றவற்றை விற்கவும் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். துறைமுக மற்றும் ரயில்வே அதிகார சபைகளை விற்றகவும் விரும்பினர். நாளாந்தம் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கிறது. ஆனால் சொக்ஸி என்நேரமும் "வற்" பற்றியே பேசி வருகிறார்.

முன்னர் டி.எஸ். சேனநாயக்கா, டட்லி, ஜோன் கொத்தலாவல போன்ற சிறந்த தலைவர்கள் ஐ.தே. கட்சியில் இருந்தனர். தற்போதைய தலைவர்கள் சுயநலவாதிகள்.

வடக்கின் 4 எம்பிக்கள் எமது கூட்டணிக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புகிறோம். இதைவிட கிழக்கின் முஸ்லிம் சமூகமும் எம் ஆதரவாளர்களே . மலையக பாராளுமன்ற உறுப்பினர்களும் எமக்கு ஆதரவளிக்கின்றனர்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஜனாதிபதியே பொறுப்பு. கடந்த 21 மாதங்களாக அவர் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இது பற்றி கலந்துரையாடியிருந்தார். போர் இல்லாவிட்டாலும் அதற்குச் செலவாகும் பணம் காணாமல் போய்விட்டது. 25 முதல் 35 அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

இக்கால கட்டத்தில் புலிகள் தமது ஆட் படை பலத்தை 3000லிருந்து 18000 வரை உயர்த்தியுள்ளனர். 6 கப்பல் ஆயுதங்களை இங்கு கொண்டு வந்துள்ளனர். சகல அரச துறை ஊழியர்களும் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே எமது கூட்டணி வன்முறை, ஊழல் அற்ற அரசொன்றை அமைக்க விரும்புகிறது என டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார். (ந-6)

# மீண்டுமொரு கறுப்பு ஜூலைக்கு பிரதமர் ரணில் தயாராகிறாரா?

## லங்கா சமசமாஜக்கட்சி கேள்வி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பேச்சுக்களை முன்னெடுக்கவும் என லங்கா சமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி -ஜே.வி.பி கூட்டணியுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஐக்கியதேசியக்கட்சி நாட்டை தவறாக வழி நடத்துவதுடன, பொய்ப்பிரசாரங்களையும் செய்து வருகிறது. எதிர்வரும் தேர்தலில் எமது கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டவுள்ளது. இதனால் பீதியடைந்த ஐ.தே. முன்னணியினர் பெருமளவு பணத்தைச் செலவழித்து தம்மால் ஆனவற்றைச செய்து வருகின்றனர்.தலைநகரின் பணக்கார,வர்த்தக சமூகத்தினர் அவர்களுக்கு நிதியுதவிகளை அளித்து வருகின்றனர்.

எமது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் போர் திணிக்கப்படும் என ஐ.தே. முன்னணி பிரசாரம் செய்து வருகிறது. ஒருவேளை, புலிகளுக்கு எதிரான போருக்கு பிரதமர் ஆயத்தமாகி வருகிறாரா? என்பது தெரியவில்லை.இன்னுமொரு கறுப்பு ஜூலைக்குப் பிரதமர் தயாராகி வந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரணவக்க தேர்தல் தொகுதியில் மட்டும் 158 ஐ.தே. கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ளனர் என முன்னாள் எம்.பி. செனவிரட்ண தெரிவித்துள்ளார். இன்னும் பலர் அடுத்த வாரமளவில் இணைந்துகொள்ளுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-6)

## இராசி பலன்

**08. 03. 2004**

**(மாசி 25, திங்கட்கிழமை)**

| | | | |
|---|---|---|---|
| துதியை | பின்னிரவு | 3.40 | மணி வரை |
| உத்தரம் | பிற்பகல் | 12.29 | மணி வரை |
| இராகுகாலம் | | 7.54-9.24 | மணிவரை |
| சுபநேரம் | | 12.24-01.54 | மணிவரை |

*சித்தம்*

**மேடம்**
எடுத்தகாரியம் கைகூடும், ஜனவசியம், தேக ஆரோக்கியம், தொழில் விருத்தி.

**இடபம்**
முயற்சி தாமதம், குடும்பகாரியம், உடல்நலக் குறைவு, வேலைப்பளு.

**மிதுனம்**
உடல் சோர்வு, வாகன சுகம், தொழிலில் ஆர்வம், காரியதாமதம்.

**கடகம்**
வாக்குமேன்மை, தனலாபம், நினைத்தகாரியம் கைகூடும், பிரயாண நன்மை.

**சிங்கம**
விதண்டாவாதம், காரியதாமதம், தன விரயம், கற்பனை மிகுதி.

**கன்னி**
புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், பிரயாணம்.

**துலாம்**
தனவிரயம், சயனசுகக் குறைவு, எதிர்பாராத நன்மை, வீண் மனஸ்தாபம்.

**விருச்சிகம்**
தொழில் இலாபம், சத்துருஜெயம், உறவினர் வழிநன்மை, எடுத்தகாரியம் கைகூடும்.

**தனுசு**
தொழில் மேன்மை, நண்பர் உதவி, புதிய விடயம், காரிய அனுகூலம்.

**மகரம்**
சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, காரிய தாமதம், புதிய திட்டமிடல்.

**கும்பம**
தொழில் கஷ்டம், பிரயாண பயம், வீண் பிரச்சினை, உடல்வியாதி.

**மீனம்**
பிரயாணம், முயற்சி கைகூடும், வாகன சுகம், களஸ்திர நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## யாழ். மேல் நீதிமன்றத்தில் மேலும் 12 இந்திய மீனவர் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை, கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டுள்ளஇந்திய மீனவர்களில் மேலும் 12 மீனவர்கள் மீது யாழ். மேல்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் காங்கேசன் துறை கற்கோளவம்,காரைநகர் மற்றும் நெடுந்தீவு ஆகிய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம் 67 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுள்ளனர்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக, ஏற்கனவே 15 மீனவர்கள் மீது யாழ். மேல் நீதி மன்றத்தில் வழக்கத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன்,தற்போது புதிதாக மேலும்12 மீனவர்கள் மது சட்டமா அதிபரினால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

## வாக்களிப்பதற்கு வசதியாக நாகர்கோவில் பாதையை திறக்குக

### தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மற்றும் வன்னிப் பகுதி மக்கள் வாக்களிக்க வசதியாக நாகர் கோவில் பாதையை திறந்து அந்தப் பகுதியிலும் வாக்குச் சாவடிகளை அமைக்குமாறு மணற்காடு இளைஞர் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை தொடர்பான கடிதம் தேர்தல் ஆணையாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வன்னிப்பகுதியிலும் வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் உள்ள மக்கள் முகமாலையில் வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை உருவானால் எல்லா மக்களும் வாக்களிக்கக்கூடியவாறும் நேரம் இருக்க மாட்டாது. அத்துடன், பாரிய நெருக்கடியும் ஏற்படும். எனவே இவற்றைத் தவிர்ப்பதற்கு வடமராட்சி கிழக்கு மக்கள் நாகர்கோவிலில் வாக்களிக்க வசதி ஏற்படுத்தப்பட்டால், வன்னிப்பகுதி மக்களும் வடமராட்சி கிழக்கு மக்களும் நெருக்கடி இன்றி வாககளிக்க முடியும் என இவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ந-43)

# விடுதலைப் புலிகளின் தியாகத்தை என்றும் மதித்து நடப்பவன் நான்

## தலைவர் பிரபாவுக்கு சங்கரி கடிதம்

(யாழ்ப்பாணம்)

**விடுதலைப் புலிகள் அமைப்பை நான் ஒருபோதும் கண்டித்துப் பேசியவனல்ல. இளைஞர்களின் போராட்டத்தையும், அவர்களின் தியாகத்தையும் பெரிதும் மதித்து நடக்கின்றேன்.**

**எமது கட்சி ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கங்களினால் காலத்துக்குக் காலம் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலும், அவ் இயக்கங்களுக்கு விரோதமான கருத்துக்களைக் கூறவோ அல்லது எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்கவோ முற்பட்டதில்லை.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

**அக்கடிதத்தில் எழுதிய முழு விபரமும் இங்கு அப்படியே தரப்படுகிறது.**



திரு.வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

அன்புள்ள தம்பி,

நீண்ட மனப்போராட்டத்தின் பின் நிச்சயமாக இங்கு நான் வெளிப்படுத்தும் கருத்துக்களும், செய்திகளும் நீங்கள் தற்போது மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளுக்குப் பெரிதும் உதவும் எனப் பூரணமாக நம்பி இக்கடிதத்தை எழுதத் தீர்மானித்தேன்.

பத்திரிகைகளின் விசமத்தனமான தலையங்கங்களும், திரிவுபடுத்தப்பட்ட செய்திகளும் வெறும் அரசியல் இலாபநோக்கோடு உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் சுயபலமற்ற அரசியல்வாதிகளும் தமிழீழ அரசியலை மாசுபடுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு நான் மனம் நொந்துபோயிருக்கின்றேன். இந்நாச சக்திகள் கடைந்தெடுத்த சுயநல, வஞ்சக நோக்கோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையோடு தொடர்பான அதன் கருத்துக்கள், செயற்பாடுகள் பற்றி முக்கியமாக எனது செயற்பாடுகள் பற்றித் தவறான நச்சுக் கருத்துக்களைத் தந்து, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே, முக்கியமாக எனக்கும் உங்களுக்கும் இடையே விரோதத்தை உருவாக்க முற்படுகின்றனர் என்பதை நான் நம்பக்கூடிய சம்பங்கள் பல இடம்பெறுகின்றன. இச்சந்தர்ப்பத்தில், என்னுடையதும், எனது கட்சியினுடையதும் நிலைப்பாட்டினை உங்களுக்கு விளக்கிக் கூறுவது பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி திரு.சா.ஜே.வே.செல்வநாயகம், திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம், திரு.சௌ.தொண்டமான் ஆகியோரின் கூட்டுத்தலைமையின் கீழ் தமிழர் பாரம்பரியக்கோட்பாடுகளுக்கு அமைய தமிழர் உரிமையை நிலைநாட்டும் நோக்குடன் அமைக்கப்பட்டு முதலில் திரு.தொண்டமான தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிச் செல்ல, திரு.செல்வநாயகம், திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரால் தொடர்ந்து வழிநடத்தப்பட்டு அவர்களின் மறைவுக்குப் பின் திரு.அ.அமிர்தலிங்கம், திரு.மு.சிவசிதம்பரம் போன்ற தலைவர்களால் மிகச் சிக்கலான அரசியற் சூழ்நிலையிலும் கட்சியின் கட்டுக்குலையாது பாதுகாப்புடன் நிர்வகிக்கப்பட்டு இப்போது பொறுப்பு எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. நீண்ட வரலாற்றினைக் கொண்ட அகிம்சை நெறிக்குட்பட்ட அரசியற் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்ட பாரம்பரியம் மிக்க இக்கட்சியை தமிழ் மக்கள் சார்பாகக் கட்டிக்காக்கவேண்டிய இன்றைய தலைமையின் பாரிய பொறுப்பு என்பதை உணர்ந்து செயற்படுகின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் முன்னோடிக் கட்சிகளான தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கடசி என்பனவும் அவற்றின் தலைவர்களும் தங்கள் கடசிக் கொள்கைகளுக்கு அமைவாகப் போராட்டங்களை நடத்தியும், காலத்திற்குக் காலம் பேச்சுவார்த்தை மூலமும் தமிழர் உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபட்ட வரலாறு யாவரும் அறிந்தவையே. உரிமைக்கான ஒப்பந்தங்கள் சிங்களத் தலைவர்களுடன் செய்யப்பட்டு பின்பு அவை மீறப்பட்ட வரலாறும் நீங்கள் அறிந்தவையே. இத்தகைய பாரம்பரிய தகைமைகளை ஆதாரமாகக் கொண்டியங்கும் இக்கட்சியைக் காக்கவேண்டிய பொறுப்பை நானும் நன்குணர்ந்து செயற்படுகின்றேன்.

இத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க எங்கள் கட்சி ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கங்களினால் காலத்திற்குக் காலம் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலும் அவ்வியக்கங்களிற்கு விரோதமான கருத்துக்களைக் கூறவோ, செயற்படவோ அல்லது எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்கவோ முற்பட்டதில்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

1994 தேர்தலின் பின் சந்திரிகா அம்மையார் ஆட்சி அமைத்துத் தமிழர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண முற்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் பேசி ஒருதீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின் உள்ளடக்கம் தமிழர் உரிமைப் பிரச்சினைகளுக்குக் குறிப்பிடத்தக்க தீர்வாக அமையும் எனக்கருதி அதற்கு ஆதரவு தெரிவித்தோம். அத் திட்டவரைபு எங்களிடம் இப்போதும் இருக்கின்றது. ஆனால், இனவாதத் தலைவர்களின் நெருக்குதல் காரணமாக அத்திட்டம் சிதைக்கப்பட்ட நிலையில் பாராளுமன்றத்தில் அரசியற் திட்டவடிவில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது நாம் அதனை முழுமூச்சாக எதிர்த்து நிராகரித்தோம்.

இக்காலகட்டத்தில்தான் அகிம்சை வழியில் நின்று ஒலிக்கும் எங்கள் உரிமைக்குரல் இனவாத அரசியல் தலைவர்களுக்கு எட்டாது என்று அறிந்து செயற்பட நாம் முற்பட்டோம். இனிமேலும் சிங்கள அரசாங்கங்களுடன் நாம் பேசிப் பயனில்லை. களத்தில் நின்று போராடும் விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் அரசாங்கம் பேசித் தீர்க்கவேண்டும் என்றும், ஏககாலத்தில் வேறு எவருடனும் பேசத்தேவையில்லை என்றும் நாம் முடிவுக்கு வந்தோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைப் பற்றியும் எனக்கு மனத்தாங்கல் ஏற்படக் காரணமாய் இருந்த சில நிகழ்வுகள் பற்றியும் விளக்கம்தர விரும்புகின்றேன்.

ஏறக்குறைய நான் அரசியலிற் பிரவேசித்து 50 ஆண்டுகள் கடந்து விட்டன. 1959ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலுடன் ஆரம்பமானது எனது தீவிர அரசியல் வாழ்வு. 1965ல் கரைச்சிக் கிராமசபைத் தலைவராகவும், 1968ல் கிளிநொச்சி பட்டண சபையாக் தரமுயர்த்தப்பட்ட வேளையில் அதன் முதற் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், அம்மக்களின் நன்மதிப்பைப் பெற்று அடுத்துவந்த பொதுத் தேர்தலில் முதன்முதல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

### பிரச்சினைக்குரியவனாக ஆக்கப்பட்டேனேயன்றி பிரச்சினைக்காரன் அல்ல

பட்டம், பதவிக்கு ஆசைப்படாது மக்கள் சேவையையும், நம் இனத்தின் நலனையும் கொண்டே அன்றுதொட்டு இன்றுவரை செயற்பட்டு வருகின்றேன். எனது செயற்பாடுகள் அனைத்தும் காலம்கடந்தாலும், மக்களால் ஏற்கப்பட்டே வந்துள்ளது. வெறும் கைதட்டலுக்காகவும், சூழ்நிலைக்கமையவும் பேசுபவன் நான் அல்ல. நீங்கள் சிறுவனாக இருந்த காலத்தில் இருந்து என் நடவடிக்கைகளை அவதானித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

நான் விடுதலைப் புலிகளைக் கண்டித்து ஒரு வார்த்தையாவது இன்றுவரை கூறியவனல்ல. இளைஞர்களின் போராட்டத்தையும், அவர்களின் தியாகங்களையும் பெரிதும் மதித்து நடப்பவன் நான். இதில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை. எனக்கென சில வழிமுறைகள் உண்டு. அவற்றிற்கு அமைய நான் நடந்துகொள்கின்றேன். மற்றவர்களின் கண்ணிற்குத் தப்பாகத் தோன்றினாலும், காலப்போக்கில் என் நிலைபபாடுகளும், செயற்பாடுகளும் வரவேற்கப்பட்டே வந்தன.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டம் என் முயற்சியால் பலரின் ஆட்சேபனைகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது. கிளிநொச்சித் தொகுதி மக்களில் ஒருவர்தானும் என் பிரேரணையை அன்று எதிர்க்கவில்லை. 1970ஆம் ஆண்டு நான் கிளிநொச்சித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்தலில் தெரிவானதிலிருந்து 1984ஆம் ஆண்டு தனி மாவட்டம் உருவாக்கப்பட் நாள்வரைக்கும், அதற்கு முன்பும் வரலாற்றில் 1983ஆம் ஆண்டு ஒரு மாணவி தவிர வேறு ஒருவரேனும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகவில்லை. அந்த மாணவிக்குப் பாராட்டுவிழா வைத்து எனது ஒருமாத சம்பளமும் கொடுத்து என் வாக்குறுதியையும் காப்பாற்றிக் கொண்டேன். பல்கலைக்கழகத் தேர்வுக்குத் திறமை இல்லாமையால் அல்ல. அவர்களுக்கு வசதி வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இடமாற்றம் பெற்றுவருழ் ஆசிரியர்கள் மறுமாதமே தம் கிராமத்திற்கு மாற்றலாகிவிடுகின்றனர். கிளிநொச்சியில் உள்ள துணுக்காய், ஆலங்குளம் போன்ற சிலபகுதிகளில் இருந்து யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வருபவர்கள் ஏறக்குறைய 75 மைல்கள் பிரயாணம் செய்யவேண்டும். இப்படிப் பல இன்னல்களை அனுபவித்த மக்கள் கிளிநொச்சியைத் தனிமாவட்டமாக உருவாக்கியதால் கிடைத்த பலனை அனுபவித்து வருகின்றார்கள். பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள் எனப் பலர் உருவாக்கப்பட்டுள்ளனர்.

800 சதுரமைல் விஸ்தீரணம் கொண்ட கிளிநொச்சித் தொகுதிக்கு யாழ். மாவட்ட சபைக்கு ஒரு முழுப்பிரதிநிதித்துவம்கூ க் கிடைக்கவில்லை. சில தொகுதிகளுக்கு இரு பிரதிநிதி துவம் கொடுக்கப்பட்டது. யாரால் இந்நிலை ஏற்பட்டதென நான் அன்றே அறிந்திருந்தேன். இன்று நிரூபணமாகிவிட்டது அந்த சூத்திரதாரி யாரென்பது.

எது எப்படியிருப்பினும் இன்று உங்கள் போராட்டத்திற்கு கிளிநொச்சித் தனிமாவட்டம் பெருமளவில் கைகொடுப்பதை நான் உணர்ந்து மகிழ்கின்றேன். அன்று கிளிநொச்சித் தொகுதியின் எல்லைகள் குடாநாட்டில், கிளாலி, எழுதுமட்டுவாள், சுண்டிக்குளம் வரை மல்லாவி, துணுக்காய், ஆலங்கேணிவரை பூநகரி, முழங்காவில், இரணைதீவு வரை பரவியிருந்தது. இப்பிரதேசத்தில் எனது கால்கள் படாத கிராமமோ வீடுகளோ இல்லை. இத்தகைய கஷ்டமான அனுபவம் வேறு எந்த அரசியல்வாதிக்கும் இருந்திருக்க முடியாது. இத்தகைய கஷடத்தின் மத்தியில் பெற்ற பதவியை தந்தை செல்வாவின் கூட்டுக்கு அமைய பெரும் பொறுப்புள்ள பதவியாகக் கருதுகின்றேன் அப்பதவியைத் துஷ்பிரயோகம் செய்யவும் மாட்டேன். இலட்சியப் பற்றோடு வாழ்ந்திராது போனால், 1970ல் இருந்து 1972ஆம் ஆண்டுவரை எனக்காகக் காத்திருந்த உப மந்திரிப் பதவியை ஏற்றிருப்பேன். இருதடவைகள் தேடிவந்த தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வேறு ஒருவருக்கு விட்டுக்கொடுத்திருக்கவும்மாட்டேன். பாராளுமன்றப் பதவிமூலம் எவ்வித சுயபலனையும் அடையாத நான் அப்பதவியைப் புனிதமானதோர் பதவியாகவே ஏற்று செயற்படுகின்றேன். உங்கள் பெயரால் செயற்படும் சிலரின் தலையீடுகள் சில சமயங்களில் விசனத்தை அளிக்கின்றது. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடவும் விரும்பகின்றேன்.

1. தேர்தல் முடிந்தபின்பு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஓர் பொங்குதமிழ் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள நானும் முதல்வர் கந்தையனும் சென்றிருந்தோம். எங்களுக்கு அழைப்பில்லை எனக் கூறியிருந்தால் கௌரவமாகத் திரும்பியிருப்போம். நாங்கள் இருவரும் கூட்டம் ஆரம்பித்த பின்பும் பல நிமிடங்கள் இருந்து பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டோம். பேச்சாளர்களாக வேண்டாம், பார்வையாளர்களாகக்கூட எம்மை ஏற்கவில்லை. மேடையின் பின்புறமாக வீற்றிருந்தோம். அந்தப் பொங்கு தமிழ் நிகழ்வில் நான் அவமதிக்கப்பட்டமையால் அதன் பின்பு எந்தப் பல்கலைக்கழக நிகழ்விலும் கலந்துகொள்ளவில்லை.
2. கடந்த தேர்தலின் பின் நடந்த இன்னுமோர் சம்பவம். 2000ஆம்ஆண்டு தேர்தலில் போட்டியிட யாரும் முன்வரவில்லை. இன்று முன்னணியில் இருப்பவர்களில் பலர் அன்று ஓடிமறைந்துவிட்டனர். அத்தகைய நபர்களின் ஒத்துழைப்பு மட்டும் இருந்திருந்தால் ஏனைய கட்சிகள் பெரிதாக எதையும் சாதித்திருக்க முடியாது. யாரும் முன்வர மறுத்தவேளை திரு.முத்துலிங்கம் அவர்கள் ஒரு வேட்பாளராக போட்டியிட முன்வந்தார். அத்தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானவர்களில் சிலர் 4000 வாக்குகளைக் கூடப் பெறவில்லை. ஆனால், திரு.முத்துலிங்கம் அவர்கள் 5000 வாக்குகளைப் பெற்றுத்தந்தார். இவர் பல்லாண்டுகாலம் உடுவில் கிராமசபைத் தலைவராக இருந்தவர். தீவிர கூட்டணி ஆதரவாளர். இவர் உங்களுக்கும் தெரிந்தவர். 2001ஆம் ஆண்டு தேர்தலில் நியமனம் அவருக்குக் கிடைக்கவில்லை. முன்னைய தேர்தலில் ஒளிந்து ஓடிய சிலர் 2001ஆம் ஆண்டு நியமனம் கேட்டமையால் உடுவில் தொகுதி இளைஞர்களின் கொந்தளிப்பைச் சமாளிக்கக் கட்சிப்பிரமுகர்களிடம் பேசி அவரை திரு.மு.சிவசிதம்பரம் இராஜினாமா செய்தபின் மூன்றுமாத காலத்திற்கு தேசியப் பட்டியலில் நியமிப்பதாக உறுதியளித்து அதைச் சில மேடைகளிலும் பகிரங்கமாக உறுதியளித்திருந்தேன். திரு.சிவசிதம்பரம் அவர்கள் இறந்ததும் நாம் கொடுத்த வாக்குறுதியைக் காற்றோடு பறக்கவிட்டுவிட்டுப் புதியவரை நியமித்து நீங்கள்தான் அதை விரும்பியதாகக் காரணம் கூறப்பட்டது. இதையறிந்து கிளிநொச்சிக்கு விரைந்து தம்பி தமிழ்ச்செல்வனுடன் நிலமையை விளக்கி மூன்று மாதங்களுக்கு மட்டும் அவரை நியமிக்க உதவுமாறுகேட்டேன். பயன் ஏதும் கிடைக்கவில்லை. கொந்தளித்துக்கொண்டு இருந்த இளைஞர்களுக்குத் திருப்தியான பதில் கொடுப்பதாகக் கூறப்பட்டது. அவ்வளவுதான். திரு.முத்துலிங்கத்துடன்தான் பாராளுமன்றம் செல்வேன் என்ற சபதம் எடுத்த நான் இன்று அந்த மக்கள் மத்தியில் செல்லாக்காசாக்கப்பட்டுள்ளேன். இது நான் வகிக்கும் பதவிக்கும், கட்சியில் நான் வகிக்கும் தலைவர் பதவிக்கும் பெரும் இழுக்கு ஏற்பட்டதாகவே உணர்கின்றேன். இவ்விடயத்தைப் பெரிதுபடுத்தாது ஒரு மாதகாலம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்த நான் மானிப்பாய்த் தொகுதி இளைஞர்களின் அன்பான வேண்டுகோளை ஏற்று பகிஷ்கரிப்பைக் கைவிட்டேன். இந்தப் பகிஷ்கரிப்பைக்கூட பத்திரிகைகளில் வெளிவராது இரகசியமாக வைத்திருந்ததற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதும் சுய விளம்பரத்தை விரும்பாததுமாகும்.
3. நான் என்றும் அமைச்சர்களுக்கு மாலைபோட்டு வரவேற்றவனல்ல. கடந்த தேர்தலின்பின்பு கௌரவ பிரதமர் யாழ்ப்பாணம் வந்தபோது அங்கிருந்த நான் அவரை வரவேற்றுப் பேசினேன். நான் பேச்சை ஆரம்பித்ததே பின்வருமாறு, ‘தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை காலமும் கடைப்பிடித்துவந்த சம்பிரதாயங்களை மீறி பிரதம அமைச்சரை வரவேற்க வந்துள்ளேன்’ எனக்கூறி அதற்குரிய காரணங்களை விளக்கினேன். ஆனால், இது சம்பந்தமாக லண்டனில் என்னைக் கண்டித்து கருத்து வெளியிடப்பட்டது என் சுய கௌரவத்தைப் பாதிப்பதாக உணர்ந்தேன்.
4. அடுத்து, பாங்கொக்கில் நடந்த முதற்சுற்றுப்பேச்சுவார்த்தையின் பின் கூறப்பட்ட கருத்து உலக நாடுகளின் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை வெறும் திராணியற்றவர்களாக, வெறும் எடுபிடிகளாகக் காட்டியது. அதற்குப் பதில்கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானேன். மறுக்கவில்லை.
5. ஜப்பானிய விசேட தூதுவர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோது ஒரு உறுப்பினர் உயர் பாதுகாப்பு வலயத்தை விட்டு இராணுவத்தை வெளியேற வேண்டும் எனக் கேட்டபோது நான் கூறியதாவது, ‘அப்படிக் கூறினால் இராணுவம் வெளியேறாது. ஓர் பகுதியை ஒதுக்கிக் கொடுத்து ஏனைய சகல இடங்களையும் விட்டு இராணுவம் வெளியேறுவதுதான் பொருத்தமானது என்றேன். பின்பு அவர் இராணுவம் 1991ஆம் ஆண்டு இருந்த இடத்திற்கு நகரவேண்டும் எனக் கூற, நான் கூறியது ‘அப்படியானால் அவர்கள் ஆனையிறவுக்கு வரவிடுமாறு

(6ஆம் பக்கம் பார்க்க)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## மூன்றாம் பகுதி

67

### 2.திருகோணமலைத் தமிழரின் வழமைகள்: சிலபிரதான அம்சங்கள்

திருகோணமலையில் நிலவிய வழமைகள் ஏனைய பிரிவுகளிலே காணப்பட்டவற்றில் இருந்து வேறுபட்டிருந்தன. அவை பெரும்பாலும் யாழ்ப்பாணத்துத் தேசவழமையினை ஒத்திருந்தன. ஏனைய பிரிவுகளிற் காணப்பட்ட வழமைகள் மட்டக்களப்புப் பிரதேசத்து வழமைகளைப் போன்றவை. தேசவழமைச் சட்டம், திருகோணமலை வாசிகளைப் பொறுத்தவரையில் எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதைக் கேட்டறிந்துகொள்வதற்கு, அங்குள்ள தலைமைக்காரரான முதலியார்களைக் கூட்டம் ஒன்றிற்கு உயர் அதிகாரிகள் வரவழைத்தனர். முதலியார்களின் குறிப்புகள் பற்றிய அறிக்கையில் மேல்வருமாறு சொல்லப்படுகின்றது.

“உத்தம தேசாதிபதியிடமிருந்து எங்களுக்குக் கிடைத்துள்ள தேசவழமைச்சட்டத்தின் பல அம்சங்கள் இன்றும் இங்கு வழங்கி வருகின்றன என்பதை, இதன் பின்னாலே கையொப்பமிட்டோராகிய நாம் உறுதிப்படுத்துகின்றோம். தந்தையானவன் இறந்த பின்பு அவன் பட்ட கடன்களை ஆண் மக்கள் பொறுப்பேற்கவேண்டும் என்ற விதி மட்டும் இங்கு வழக்கில்லை. என்பதால் அதனை நிராகரித்தல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்”

முதலியார்கள் சொன்னதன் பிரகாரம், தகப்பன் ஒருவன் பட்ட கடன்களை அவனுடைய உடைமைகளில் இருந்து தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும், அவனுடைய மக்களை, அக்கடன்களை உத்தரிக்கவேண்டிய பொறுப்பிலிருந்தும் நீக்கிவிட வேண்டும் என்றும் திருகோணமலை அரசாங்க அதிபர் தேசாதிபதிக்கு எழுதிய அறிக்கையிலே குறிப்பிட்டார்.

சொத்துரிமைகளைப் பொறுத்தவரையிலே தம்பலகாமம்பற்று, கட்டுக்குளம்பற்று, கொட்டியாரம்பற்று என்பவற்றில் உள்ள வழமைகள் தேசவழமைச் சட்டத்தில் உள்ள அம்சங்களில் இருந்து வேறுபட்டனவாய் காணப்பட்டன. அவை மருமக்கள் தாய முறையினை அடிப் படையாகக்கொண்டவை. தேசவழமைப்படி தகப்பனின் முதுசொம்மான உடைமைகள் எல்லாம் அவனுடைய ஆண்மக்களின் உரிமையாகும்; தாயின் சீதனமாகிய உடைமைகள் பெண்பிள்ளைகளின் உரிமையாகும். பெற்றோரின் தேட்டமான உடைமைகள் சம பங்குகளில் எல்லாப்பிள்ளைகளினதும் உரிமையாகும்.

திருகோணமலைப்பிராந்தியத்திலே, திருகோணமலை நிர்வாகப் பிரிவுக்கு வெளியில் உள்ள மூன்று பற்றுக்களிலும், முற்காலங்களிலே தகப்பனின் முதுசொமான உடைமைகளில் ஆண்மக்கள் உரிமை பெறுவதில்லை; அவையாவும் அவனுடைய மருமக்களின் உரிமையாகும். இது முக்குவரிடையே காணப்பட்ட வழமைகளை ஒத்ததாகும். தாயானவள் சீதனமாகப் பெற்றிருந்த பொருள்கள் எல்லாம் பிள்ளைகள் எல்லோருக்குஞ் சம பங்குகளில் உரிமையாகும். எனவே பாகப்பிரிவினையில் சீதனம், தேட்டம் ஆகியவற்றுக்கிடையில் எதுவிதமான வேறுபாடும் இல்லை. பெண்ணொருத்தி கலியாணம் முடித்துத் தாய்மை நிலையினை அடைந்த பின் அவளுடைய சீதனம், தேட்டம் என்பவற்றிற்கான உரிமைகளைப் பொறுத்தவரையில் நடைமுறையில் எந்த விதமான வேறுபாடுகளும் இருப்பதில்லை.

#### கலியாணம்

கலியாணங்கள் பெற்றோரினாலே பேசித் தீர்மானிக்கப்படுவது அக்காலத்து வழமை. மாப்பிள்ளை ஒருவனுக்கும் பெண்ணொருத்திக்கும் கலியாணம் பொருத்தம் பண்ணிய பின்பு, அவர்களின் பெற்றோர்கள் தேசத்துவன்னியனாரிடஞ் சென்று அதனைப் பற்றி அறிவிப்பது வழக்கம். ஆண் சார்பிலும் பெண் சார்பிலுஞ் செல்லும் இரு தரப்பினரும் பழம்,பாக்கு,வெற்றிலை ஆகிய மங்கலப் பொருட்களை எடுத்துச்சென்று உபகாரமாகக் கொடுப்பது வழமை. இது இலங்கையிலே, தமிழர் வாழும் பகுதிகளிலே நெடுங்காலமாக நிலவி வந்தவொரு வழக்கமாகும். தங்கள் உற்றார் உறவினரைக் கலியாணத்துக்கு வரவழைக்கச் செல்லும்போது செப்புத் தட்டங்களிலே பாக்கு, வெற்றிலை கொண்டு போகும் வழக்கம் சில ஊர்களில் இன்று வரை காணப்படுகின்றது.

வன்னியனாரின் முன்னிலையிலே கலியாணம் முடிக்கும் ஆணும் பெண்ணும் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். தாமிருவரும் கலியாணம் முடித்துக் குடித்தனம் பண்ணப் போவதாகவும், தாங்கள் பிரிந்து செல்லுமிடத்து, அக்குற்றத்திற்கு ஒப்பான தண்டனைகளை உத்தரித்துக்கொள்வதற்குச் சம்மதிப்பதாகவும் அவர்கள் சத்தியப்பிரமாணஞ் செய்துகொள்வர்.

வன்னியரின் முன்னிலையிலே சம்பந்தம் பற்றி ஒப்பந்தஞ் செய்து கொண்டதன் பின்பு அவரவர்க்குரிய சமயாசாரப்படி கலியாணங்கள் நடைபெறும். இஸ்லாமியரின் கலியாணங்கள் அவர்களின் சமயாசாரங்களின் பிரகாரம் நடைபெறும். உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்களின் கலியாணங்கள் திருச்சபையின் முறைகளுக்கேற்ப நடைபெறும். இந்துக்களின் கலியாணச் சடங்குகள் அவர்களின் சமயாசாரங்களின் படி நடைபெறும்; பொதுவாகப் பிராமணக் குருமாரே அவர்களின் கலியாணச் சடங்குகளை நடாத்துவர். உற்றார், உறவினர்களையும், அயலாரையும் கலியாணச் சடங்கிற்கு வரவழைப்பது வழக்கம். கலியாணம் முடிந்த பின்பு விருந்துபசாரங்களும் கொண்டாட்டங்களும் பல நாட்களாகத் தொடர்ந்து நடைபெறும்.

#### சீதனம்

தாயின் சீதனம் தாய்,தகப்பன் ஆகியோரின் தேட்டம் என்னும் வகைகளில் அடங்கும். சொத்துக்களை பெண்ணுக்கு, அவள் கலியாணம் முடிக்கும் காலத்திலே சீதனமாகக் எழுதிக்கொடுப்பது வழமை. அசைவுள்ளபொருட்களையும் அசைவற்ற பொருட்களையும் சீதனமாகக் எழுதிக்கொடுப்பர். காணி பூமி,வீடுவளவு, மாடுகண்டு , தங்க நகை, வெள்ளி நகை, தளவாடங்கள், பாத்திரங்கள் முதலியவற்றைச் சீதனமாக எழுதிக்கொடுப்பது வழமை. சீதனமாக்கொடுப்பனவற்றை, கலியாணச் சடங்கின் போது சபையோர் முன்னிலையாகச் சீதன உறுதியினை எழுதிச் சாட்சியங்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு கொடுப்பது வழக்கம்.

#### சொத்துரிமைகள்

சொத்துடைமைகள் யாவும் முதுசொம்,சீதனம், தேட்டம் என்னும் 3 வகைகளுக்குரியவை. ஒருவன் தனது முன்னோர் வழி உரிமையாகப் பெற்ற சொத்துக்கள் எல்லாம்முதுசொம் எனப்படும். ஒருவனுடைய முதுசொமான சொத்துக்கள் அவ்னுடைய பிள்ளைகளுக்கு உரிமையாவதில்லை. அவை அவனுடைய சகோதரியின் மக்களான மருமக்களின் உரிமையாகும். மருமக்கள் இல்லாதவிடத்து, அவை அவர்கள் வழி உரிமைக்காரரைச் சேரும்.

கலியாண சமயத்திலே பெண்ணொருத்திக்குப் பெற்றோர் எழுதிக்கொடுக்கும் சொத்துக்கள் சீதனம் என்ற வகைக்குரியனவாகும். சீதனமான எல்லாம் மக்களின் உரிமையாகும். ஆண்,பெண் என்ற வேறுபாடின்றி அவை எல்லாப்பிள்ளைகளுக்கும் உரிமையாகும். தாயின் சீதனமானவற்றுள் அடங்கும் பொருள்களையும் நிலங்களையும் தாய், தகப்பன் ஆயினோர் தங்கள் பெண்பிள்ளைகள் கலியாணம் முடிக்கும்பொழுது சீதனமாக எழுதிக்கொடுக்க முடியும். பெண் பிள்ளைகள் இல்லாத விடத்துத் தாயின் சீதனம் ஆண்பிள்ளைகளின் உரிமையாகும்.பெற்றோர் இருவரும் இறந்த பின்பு, தாயின் சீதனமான சொத்துக்களை சீதனம் பெறாத பெண்பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் சம பங்குகளிற் பகுந்துகொள்வர்.

(தொடரும்)

## விடுதலைப் புலிகளின்...

(5ஆம் பக்கர் தொடர்ச்சி)

கேட்பார்கள். அதை நாம் விட்டுக்கொடுக்க முடியுமா?’ என்பதே. இப்படிக் கேட்டதன் மூலம் நாம் அனைவரும் முட்டாள்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தக் கூடியதாய் இருந்தது. ஆனால், இவ்விடயம் நான் ஆனையிறவை இராணுவத்திற்கு விட்டுக்கொடுக்குமாறு கேட்டதாக திரித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

6. என் உள்ளத்தை வேதனை அடையச் செய்த மற்றுமோர் சம்பவம் - ஐக்கிய நாடுகள் சபை சம்பந்தமானது. ஐக்கியநாடுகள் சபையின் கடந்த வருட அமர்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நான் பிரதமருடனோ அல்லது வேறு ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனோ செல்லவிருக்கவில்லை. ஆனால், நான் ஐக்கியநாடுகள் சபையின் கூட்டத்தொடருக்கு போகக்கூடாதெனக் கண்டிப்பான உத்தரவு வந்தது. இதில் எவ்வித நியாயமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குழுநிலையில் பேசும் சந்தர்ப்பம் ஏதாவது கிடைத்திருந்தால் நீங்கள் விரும்பும் கருத்துக்களைக்கூடப் பேசியிருக்கலாம். இவ்விடயத்தில் தலையிட்டதை எக்கோணத்திலிருந்தும் என்னால் நியாயப்படுத்திப் பார்க்கமுடியவில்லை.

7. யாழ். நூல் நிலையத் திறப்புவிழாத் தொடர்பான சம்பவங்களும் மன நிறைவைத் தரவில்லை. வேண்டாத, வலுவான காரணமற்ற முடிவுகளை மேற்கொண்டு திறப்புவிழா தடுத்து நிறுத்திவைக்கப்பட்டது. யாழ். மாநகர சபை ஏகமனதாக நான் திறக்கவேண்டும் எனக் கேட்டதால்தான் ஒத்துக்கொண்டேன். தவிர நான் அதை விரும்பிக்கேட்டவனல்ல. நூல் நிலையத்தை நான் திறப்பதுதான் பிரச்சினை என்றால், என்னிடம் முறையாகத் தெரிவித்திருந்தால் விலகி ஒதுங்கியிருப்பேன். அதற்கு மாறாக நான் மிகவும் மோசமான முறையில் அவமானப்படுத்தப்பட்டேன்

8. அடுத்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் மாற்றம் ஏற்படுத்தினால் மாத்திரம் அன்றி அக்கட்சியுடன் இணைந்து செயற்படுவது சிரமமாய் இருக்கும் எனக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியதாக எனக்குக் கூறப்பட்டது. நான் வெளிநாடு சென்றிருந்த வேளை அக்கூட்டம் நடைபெற்றது. இக்கருத்துப்பற்றிய தகவல்களின் நம்பகத்தன்மை பற்றி எனக்குத் தெரியாது. மேலும், பத்திரிகைகளிலும் இக்கருத்துச் சார்ந்த செய்திகள் வெளியாகின. கூட்டணித் தலைவர் என்ற முறையில் நான் சமாதான முயற்சிகளுக்கு எந்த வகையில் பாதகமாக நடந்துகொண்டேன் என்பதை எனக்குத் தெளிவுபடுத்தவில்லை. மேலும், கூட்டமைப்பு உருவாகும் முன்பே முன்னைய பாராளுமன்றத்தில் (2000ஆம் ஆண்டு தேர்தலின் பின்) மூத்த உறுப்பினர் என்ற காரணத்தால் நானே சம்பிரதாயப்படி பாராளுமன்றக் குழுத் தலைவராகச் செயற்பட்டேன். அந்த வகையில் 13 தடவைகளுக்குமேல் பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகள் சம்பந்தமாகப் பேசியுள்ளேன். உங்களுக்குச் சார்பாக நான் ஆற்றிய உரைகளில் குறிப்பிட்ட சிலவற்றின் முக்கியசாரத்தை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

- புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குங்கள்.
- அரசுப் படைகள் பளையை மீளப்பெறுவதற்கு 10 ஆண்டுகள் சென்றாலும் முடியாதென்றும், ஆனையிறவைக் கைப்பற்றுவதென்பது பகற்கனவு என்றும்,
- 35,000 அரச படைவீரர்களை உயிருடன் மீட்டுத் தாருங்கள் என்று உலக நாடுகளை மண்டியிட்டுக் கேட்கவேண்டிய நிலை மீண்டும் வராது என்று எண்ணாதீர்கள் என்றும்,
- விடுதலைப் புலிகள் 20மைல்களுக்கு அப்பால் எழுதுமட்டுவாளில் இருக்கின்றார்கள் என்று எண்ணாதீர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று அல்லது 4மைல்களுக்குள் இருக்கும் கல்முனை, கௌதாரிமுனை போன்ற கிராமங்களில் விடுதலைப் புலிகள் இருக்கின்றனர் என்பதை மறந்துவிடவேண்டாம் என்றும்

பலதடவை பாராளுமன்றில் பாதுகாப்பு அமைச்சரை நோக்கி நேரடியாகவே உரையாற்றியுள்ளேன். அத்தகைய 13 பேச்சுக்களின் பிரதிகளை உங்களிடம் கொடுக்கச்சொல்லி தம்பி தமிழ்ச்செல்வனிடம் கொடுத்துவந்தேன்.


ஒரு கட்சி அங்கத்தவர்களிடையே கொள்கை, கருத்து வேறுபாடுகள் சகஜம். இவ்வேறுபாடுகள் கட்சி மட்டத்தில் தீர்க்கப்படும். சுயமாகச செயற்படக்கூடிய சுயபலமிக்க தலைவர்கள் மத்தியில் இது இலகுவானது. ஆனால், சுயபலமற்ற எப்போதும் அடுத்தவரைச் சார்ந்து நின்று சுய தேவைகளைப் பூர்த்திசெய்யும் அடிவருடி அரசியல்வாதிகளும், கூடியிருந்து குழிபறிப்பவர்களும் தலைமையைக் காட்டிக்கொடுத்துப் பதவிபெற முயல்பவர்களும் எல்லாக் கட்சிகளிலும் உண்டு. இத்தகைய பாதிப்புகள் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் உண்டு.

இறுதியாக எனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த விரும்புகின்றேன். விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகளுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியோ, நானோ எவ்வித ஊறும் விளைவிக்காது முழு ஒத்துழைப்பையும் தருவோம் என்பது உறுதி. தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பணியில் ஈடுபடும் அதேவேளை, தனது தனித்துவத்தையும் பேணிக்காக்க வேண்டும் என்று எம் கட்சியினர் அனைவரும் மிக உறுதியாக இருக்கின்றனர் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இன்று அரசையும் விடுதலைப் புலிகளையும் பேசவைத்து ஒரு சுமுகமான நிலை நம்நாட்டில் உருவாக உதவிய நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களுக்கு ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தில் அவர் பார்வையாளர் வரிசையில் உட்கார்ந்திருந்தபோது ஓர் உறுப்பினர் அவரைக் காரசாரமாக மிகக் கீழ்த்தரமாகத் திட்டித் தீர்த்தார். அன்றைய சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க எச்சரித்தும் கூட அவரின் மன ஆறுதலுக்கேனும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களோ யாரும் மன்னிப்புக் கேட்கவில்லை. ஒருவராவது அவருக்கு ஆறுதல் கூறும் வகையில் பேசாதமையால், நானே எழுந்து அவரைக் கௌரவிக்கும் வகையில் உரையாற்றியதுடன், நாட்டு மக்கள் சார்பில் நான் மன்னிப்பும் கோரினேன். அன்றிரவு என்னைத் தொலைபேசியில் திட்டியவர்கள் பலர். இப்பிரமுகரை நோர்வேயில் தனியாகச் சந்தித்துப் பேசிய விடயங்கள் என்ன என்பதை அவரே உங்களுக்குக் கூறியிருப்பார். அந்த அளவுக்கு என் ஆதரவு உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருந்துள்ளது. தொடர்ந்தும் இருந்துவரும்.

இறுதியாகத் திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பொழுது அண்ணன் ஆனந்தசங்கரியும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தால், பல விடயங்களைப்பற்றிக் கலந்துரையாடியிருக்க முடியும் என்றும் பத்திரிகைகளும், ஊடகங்களும்தான் சில கருத்துக்களைத் திரிபுபடுத்தி வெளியிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றார்கள் என்றும் கூறியதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். இச்செய்தி சில ஊடகங்கள் கூறுவதுபோன்றில்லாமல் ஒரு அமைதியான சுமுக சூழலை எனக்கு உணர்த்துவதாக அமைந்தது. திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கூற்றுத்தான் என்னைக் கடித மூலம் சுயவிளக்கத்தைத் தரத்தூண்டியது. புரிந்துணர்வுடன் செயற்பட இடமுண்டு என உணர்கின்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் நேரில் கலந்துரையாடவும் விரும்புகின்றேன்.

அன்புடன்



வீ. ஆனந்தசங்கரி

# வெற்றிவாய்ப்பைக் கோட்டைவிட்ட சம்பத்திரிசியார் கல்லூரி அணி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் கடந்த வெளளி, சனி ஆகிய தினங்களில் பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பத்திரிசியார் கல்லூரி அணிக்கு வெற்றிபெற அதிக வாய்ப்பிருந்தும் அது வெற்றியைத் தவறவிட்டது. மத்திய கல்லூரி அணிக்கும் பத்திரிசியாா கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற இப்போட்டியே சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இப் போடடியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பத்திரிசியார் கல்லூரி அணி முதல் இன்னிங்சிற்காக 8விக்கெற்றினை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. துடுப்பாட்டத்தில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் ஆர். வினோதன் 46ஓட்டத்தினையும், நிசாந்தன் 38ஓட்டங்களையும் பெறறனர். பந்துவீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பில் யசோ 4 விக்கெற்றினைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்தியகல்லூரி அணி 46ஓவர்களில் சகல விக்கெற்றினையும் இழந்து 120ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்துவீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணிசார்பில செல்வின் லொயிட் 4 விக்கெற்றினையும், வினோதன் 3 விக்கெற்றினையும், சுரேன், விதுபாலா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

83 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த பத்திரிசியார் கல்லூரி அணி தனது இரண்டாவது இனனிங்சில் துடுப்பெடுத்தாடி 4விக்கெற்றினை இழந்து 124ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. துடுப்பாட்டத்தில் இவ் அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய செல்வின் லொயிட் 56ஓட்டங்களைப் பெற்று அரைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். மற்றும் சுஜநதன் 48ஓட்டங்களைட் பெற்றார்.

207ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் 2வது இன்னிங்சை ஆட ஆரம்பித்த மத்திய கல்லூரி அணி ஆட்டநேர முடிவினபோது 6 விக்கெற்றினை இழந்து 129ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணிசார்பில் சுஜீவன் 2விக்கெற்றினையும், வின்சன், லொயிட், வினோதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர். (யே-121)

## விளையாட்டுச் செய்திகள்

# 19 வயது உலகக்கிண்ணத்தை பாகிஸ்தான் கிரி.அணி சுவீகரித்தது



கடந்த 5ஆம் திகதி டாக்காவில் நடைபெற்ற 19வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண இறுதிப போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் தோற்கடித்துப் பாகிஸ்தான் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றி பாகிஸ்தான் அணி எதிர்பார்ககப்பட்டதைப் போலவே முதலில் துடுப்பெடுத்தாடியது. 9விக்கெற் இழப்பிற்கு 230ஓடடங்களைப் பெற்ற பாகிஸ்தான் அணியின் சார்பாகத் தலைவர் காலித் லத்தீப்பும் அட்னன் கானும் முதல் விக்கெற இணைப்பாட்டமாக 53ஓட்டங்களைப் பெற்றனர். ஒரு கட்டத்தில் 84ஓட்டங்களுக்கு 4 விக்கெறறுக்களை இழந்து பாகிஸ்தான் அணி மிக இக்கட்டான நிலையிலிருந்தபோது இக்காமாலும் சல்மான் காதிரும் ஒன்றிணைந்து 97ஓட்டங்களை மேலதிகமாகச் சேர்த்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சேவியர் மார்ஷனும், திஸ்ஷான் மாறாஜூம் 58 இணைப்பாட்டங்களுடன் நல்ல அத்திவாரத்தை இட்டுக்கொடுத்தனர். வெற்றிவாய்ப்புப் பெரும்பாலும் மேற்கிந்திய வீரர்களின் பக்கமே இருந்த பொழுதும் விக்கெற்றுக்களுக்கிடையே மிகுந்த பதட்டப்பட்டு அநாவசியமான ரன் அவுட்கள்மூலம் 11பந்துகள் மீதமிருந்த நிலையிலும் 5 ஓட்டங்களால் அவ்வணி தோல்வியைத் தழுவியது.

ரிஷிபேக்கனும் மோர்வின் மத்தியூவும் மிக அற்புதமரக மேற்கிந்திய அணி சார்பாகப் பந்து வீசியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (யே)

# இந்தியாவுடனான தொடரில் வெற்றியே எமது இலக்கு!

## இன்சமாம்

வெற்றியே எமது இலக்கு என்பதை மனதில் இருத்தி இந்தியாவிற்கு எதிரான தொடரில் நாம் களம் இறங்குவோம் என பாகிஸ்



தான் அணியின் தலைவா் இன்சமாம உல்ஹக் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.

லாகூரில் உள்ள கடாபி மைதானததில் பயிற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டிருந்தது. இப பயற்சியின் போது கருத்துத் தெரிவித்த இன்சமாம்,

இந்தியாவிற்கு எதிரான தொடரில் நாம் கடுமையாக உழைப்பதோடு மட்டுமன்றி அதில் வெற்றி பெறுவோம். இத்தகைய அணுகு முறையுடன் இந்திய அணியை நாம் வீழ்த்துவோம்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர்களான இம்ரான் கான், வஸீம் அக்ரம் ஆகியோரின் ஆலோசனைகளால் பாகிஸ்தான் அணியில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிற்கு எதிரான போட்டிகளில் பதற்றம் அடையாமல் விளையாட வேண்டும் என்பதை பாகிஸ்தானிய் வீரர்கள் உணர்ந்துள்ளார்கள். இந்தியாவிற்கு எதிரான போட்டிகளில் சிறப்பாக விளையாட எமது வீரர்கள் தயாராகவும், ஆர்வமாகவும் உள்ளார்கள். இந்தியாவிற்கு நாம மிகவும் கடினமான விளையாட்டைக் கொடுப்போம் எனக்கூறிய இன்சமாம், இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளாகள் முக்கிய கருவியாக இருப்பார்கள் எனக் கூறினாார்.

அத்துடன், இரு அணிகளினதும் பந்துவீச்சாளர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் எங்களிடம்தான் சர்வதேச அளவில் சிறந்த பந்து வீச்சாளர்கள் உள்ளனர். அக்தார், முகமது சமி, ஷப்பீர அகமது ஆகியோர் தற்போது சிறப்பாகப் பந்து வீசி வருகின்றனர். இந்திய அணியின் பந்துவீச்சுக்கு எமது துடுப்பாட்ட வீரர்கள் முகங்கொடுக்கத் தயாராகவுள்ளனர். ஏனெனில் இந் திய அணியின் பந்துவீச்சு குறிப்பிடும படியாக இல்லை. எங்களுடைய துடுப்பாட்ட வீரர்கள் 280ஓட்டங்ளைக குவித்தால் இந்திய அணியை ஒரு நாள் போட்டிகளில் எங்களுடைய பந்துவீச்சாளர்கள் கட்டுப்படுத்தி விடுவார்கள் என இன்சமாம் கருத்துத்தெரிவித்தார். (யே-121)

# இலங்கை~ஆஸி.டெஸ்ட் தொடர் இன்று காலியில் ஆரம்பம்


இலஙகை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி இன்று காலியில் ஆரம்பமாகவுள்ளது. பலம்வாய்ந்த அவுஸ்திரேலிய அணியுடன் விளையாட இலங்கை அணியும் தயாராக இருக்கின்றது. இந்த வகையில இரு அணிகளும் இலங் கையில் இதுவரை 7டெஸ்ட்போட்டிகளில் விளையாடியுள்ளனா். இதில் 2டெஸ்ட் போட்டிகளில அவுஸ்திரேலிய அணியும், ஒரு போட்டியில் இலங்கை அணியும் வெற்றி பெற்றுள்ளன. அத்துடன் 4 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சம நிலையில் முடிவடைந்துள்ளன.




ஹஷான் திலகரத்தின

எனினும், இரு அணிகளும் இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் 13டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று ஆரம்பமாகவுள்ள இப் போடடியில் இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சவாலாக விளையாடுவர் என எதிர்பாாக்கப் படுகிறது. (யே-121)

# உலக விளையாட்டு வலம்



தற்பொழுது அவுஸ்திரேலியாவில் மெல்பேண் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய பகிரங்க கார்பந்தயப் போட்டிகளில் பெராரி மோட்டர் கார் அணியின் உலக முதல்தர வீரரான மைக்கல் சூமாக்கர் முன்னணி வகித்துக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



ஸ்பெயினின் கார்லோஸ் மோயா மெக்சிக்கோவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏ.ரீ.பி. பகிரங்க ரெனிஸ் போட்டியில் இத்தாலியின் பிலிப்போ வொலநதிரியை எதிர்த்தாடுகிறார்.



மேற்கிந்தியத் தீவுகளின் தெரிவு செய்யப்பட்ட துணைவேந்தர் அணிக்கு எதிராக அபாரமாக ஆடிய நாசர் ஹுசெய்ன் பந்தை திருப்பிவிடும் காட்சி.



டுபாய் பாலைவனப் போட்டிகளில் பக்கெடுக்கும் நிக் பால்டோ கொல்ப் பயிற்சியல் ஈடுபடுவதை படத்தில் காண்றீர்கள்.



இங்கிலாந்தில் நடைபெறும் எவ்.ஏ.கிண்ணத்திற்கான கால் இறுதியாட்டத்தில் புல்ஹாம் அணியினரை மிகக் கடுமையாக எதிர்த்தாடி 2:1என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தெரிவாகியிருக்கும் மஞ்செஸ்ரர் யுனைடட் அணியினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்துவதைப் படத்தில் காணலாம்.



மேற்கிந்தியத் தீவுகளின் தெரிவு செய்யப்பட்ட துணை வேந்தர் அணிக்கெதிராக மாபெரும் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி யினர் மகிழ்ச்சி வெள்ளத்துடன் ஒருவரையெருவர் ஆரத் தழுவும் காட்சி.



அமெரிக்க புளோரிடா மநிலத்தில் கிளேவ்லாண்ட் இந்தியன் அணியினரும் ஹுஸ்டன் அஸ்ரோஸ் அணியினரும் ஒரு புள்ளியைப் பெறுவதற்கும் அதனை இல்லாமைற் செய்வதற்குமான பலப்பரீட்சையில் காணப்படுகின்றன.



தெரிவுசெய்யப்பட்ட துணை வேந்தர் அணியின் மேற்கிந்திய வீரர்களுக்கெதிரான பயிற்சி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் செஞ்சரி அடித்த இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகனைப் படத்தில் காண்கிறீர்கள். முதல் நாள் ஆட்டத்தின் மதியபொசனம் வரை மிக அற்புதமாகத் துடுப்பெடுத்தாடிய வோகன் 105ஓட்டங்களை எடுத்திருந்தார். 200ஓட்டங்களை நோக்கி நிதானமாக ஆடிக்கொண்டிருக்கிறார் என்று எண்ணிபோது டுவிட் மாசிஸ் வீசிய பந்து நேரடியாக விக்கெற்றில் மோதியதினால் அவர் ஆட்டமிழப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கழகங்களுக்கிடையிலான ரக்பி உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாட்டு வீரர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பாக மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் கிளமோகன் அணியினரின் முறைகேடான நடத்தைக்கு இப்படம் சிறந்த எடுத்துக்காட்டாகும். எதிரணியுடனான போட்டியில் கிளமோகன் வீரர்கள் விளையாட்டு விதிகளை மீறி அடிதடிகளில் இறங்கினர் இதனால் இரு அணியைச் சார்ந்த வீராகளும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

# பெண்மையின் மேன்மை போற்றி பேருவகை கொள்ளும் தினம்

உலகெங்கிலும் சர்வதேச மகளிர் தினமாக மார்ச் மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. பெண்கள் தினம் என்பது பெண்களின் உரிமைகளை வலியுறுத்தும் ஓர் தினமாகும். மனித உரிமைகள் பற்றி உரத்துப் பேசப்படும் இக்காலத்தில் பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே என உணரப்படவேண்டும்.

பெண்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய முறையான மதிப்பைக் கொடுத்த எல்லாநாடுகளும் மகத்தான நிலையை அடைந்திருக்கின்றன. எந்தநாடு, எந்த மக்கள் பெண்களை மதிக்கவில்லையோ அவை எந்தக்காலத்திலும் சிறந்த நிலையை அடைந்ததில்லை, அடையவும் முடியாது.

நமது நாட்டில் ஆணுக்கு தரப்படும் உரிமைகளில் குறைந்த பட்ச அளவு கூட பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. கிராமப் புறங்களில் பிறக்கும் பெண் குழந்தைகள் தான் தமது வாழ்நாள் முழுவதும் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். இந்தக் கொடுமைகள் அந்தப் பெண்குழந்தை பிறந்தநாளில் இருந்தே தொடங்கி விடுகின்றன. இவற்றிலிருந்தது அவர்கள் மீண்டு வருவதென்பது கடினமானதொன்று.

நகர்ப்புறங்களில் ஆணுக்குச் சமமாக கல்வி, வேலை வாய்ப்பில் இடம்பெற்றாலும் உரிமையிலும் முடிவெடுப்பதிலும் இன்று கூட அவர்கள் ஆணாதிக்கத்தின் கீழ் அடக்கி வைக்கப்படுகின்றனர். ஆண் பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது பெண்பிள்ளைகளுக்கு உணவு கூடச் சரிவரக் கிடைப்பதில்லை. இவை மட்டுமன்றி பெண்கள் கல்விச் சாலைக்குச் செல்வதும் மறுக்கப்படுகிறது. படிப்பைப் பாதியில் நிறுத்தி வைப்பது பெண்களுக்குத்தான்.

### மகளிர் உரிமையும் மனித உரிமையே

பெண்கள் பண்டைக்காலம் முதல் பாவத்தின் பிறப்பிடமாகவே கருதப்பட்டு வந்துள்ளனர். பெண் குழந்தை பிறப்பது முன்செய்த பாவத்தின் பலன் என்றும் பெண் குழந்தை வீட்டிற்கும் சமுதாயத்திறகும் மிகப் பெரிய சுமை என்றும் கருதி பிற்போக்குத் தனமான எண்ணங்களால் உந்தப்பட்டு பெண் சிசுக்களை அழிக்கும் கொடிய பழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆண் மேலாண்மை ஆண் சந்ததியை வேண்டி நிற்கும் மனநிலை வயதானபோது ஆண்பிள்ளை பாதுகாப்பான என்ற அசட்டு நம்பிக்கை போன்றவை பெண் குழந்தைகளை புறக்கணிக்கத் தூண்டுகின்றன.

மிகவும் வறுமை நிலையில் இருக்கும் பல கிராம மக்களிடம் பெண்குழந்தைகள் என்றாலே பயம். நாம் பெண்பிள்ளையாகப் பிறந்து இந்த அளவுக்கு வரும் வரை நாமும் நம் பெற்றோரும் உடன் பிறந்தோரும் பட்டபாடே போதும். மீண்டும் அப்படி வரவேண்டாம் என்று வெறுக்கின்றார்கள்.

20 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கப் போகும் கௌரவ இழுக்குக்கு பயந்து தாங்கள் பெற்ற பெண்குழந்தைகளுக்கு தாங்களே சமாதி கட்டி விடுகிறார்கள்.

தாயாக ஒரு பெண் வேண்டும், தாரமாக ஒரு பெண் வேண்டும், தங்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும ஆனால் தங்கள் குழந்தையாக பெண் வேண்டாம் என்று பெணணே நினைக்கும் சமூகம் இது.

பெண்ணைப் பெற்றெடுத்த தாயே இவ்விதம் நினைத்துக் கொள்வது நினைக்கத் தூண்டுவது இந்த சமுதாயத்தின் மிகப் பெரிய கொடுமையாகும். சுயநலத்தால் மட்டுமின்றி பெண் சிசு கருவிலேயே கொலலப்படாவிட்டால் இவள் இந்த சமுதாயத்தில் பலமுறை கொல்லப்படுவாள் என்ற பயத் தாலும் சிசுக்கொலை நடந்துவருகிறது.

வேண்டும் என்றே குழந்தைகள் கொல்லப்படுவது வெளியில் தெரிவதில்லை. தேவையில்லாத பெண் குழந்தைகள் கவனிக்கப்படாமல் விடப்படுவதாலும் இறந்து விடுகின்றன. சமுதாயத்தில் பெண்களுக்கு சிறப்பிடத்தைத் தந்து உயரிய பண்பாட்டை உலகுக்கு பறைசாற்றும் இடம் தமிழ்நாடு. நதியை, கடலை, மண்ணை, செடியை எல்லாவற்றையும் பெண்ணாகப் போற்றும் - தாயாகவும், தெய்வமாகவும் வணங்கி வழிபடும் - இந்த நாட்டில்தான் பெண் சிசுக்கொலைகளும், கற்பழிப்புக்களும், பெண் கொலைகளும் அதிக அளவில் நடந்துவருகின்றன.

> எந்த நாட்டில் குடும்பத்தில் பெண்களுக்கு மேன்மையான இடம் இல்லையோ, எங்கே பெண்கள் துயரத்தோடு வாழ்கிறார்களோ, அந்த நாடும் குடும்பமும் உயர்வடைவதற்கான நம்பிக்கையே இல்லை.
>
> சுவாமி விவேகானந்தர்

### பெண்களின் பெருமை போற்றப்பட வேண்டும்

பெணணுரிமைக்காக போராடிய தலைவர்களும், எழுதிய எழுத்தாளர்களும், பாடிய கவிஞர்களும் தமிழகததில் தான் அதிகம். ஆனால் அவர்களது கருத்துக்கள் படிப்பறிவற்ற கிராமப்புற மக்களை எட்டவே இல்லை என்பதுதான் உண்மை. வெளி உலகிற்கே தெரியாதவண்ணம் ஓசைபடாமல் பெண் இனத்தின் சதவிகிதம் இன்று குறைந்து கொண்டு வருகிறது. பெண் சிசுக்கொலை விஷயத்தில் தமிழ் நாட்டைப் பின்னுக்குத் தள்ளி விட்டது பஞ்சாப் மாநிலம். அங்கு கருவில் உள்ள குழந்தை பெண் என்றால் உடனே அழித்துவிடுகின்றனர்.

இதற்கென பஞ்சாப்பில் கருக்கலைப்பு மையங்கள் நம் ஊர் லாட்டரி சீட்டுக் கட்டைகள் போல ஆங்காங்கே புற்றீசல்கள் போல முளைத்துள்ளன. இதைவிடவும் கொடுமை அங்கே கையில் ஸ்கான கருவியுடன் கருக்கலைப்பு செய்யும் சில போலி டாக்டர்கள் அலைந்து கொண்டும் உள்ளனர்.

கருவில் வளரும் குழந்தை பெண் என்ற காரணத்திற்காக கருக்கலைப்புச் செய்பவர்கள் இந்தியர்களும், சீனர்களுமே என்றும், அவர்கள் நன்கு கல்வித் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும், தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் மக்கள் கூறுகின்றனர். குழந்தையின் பால் என்னவென்று நவீன கண்டுபிடிப்புக்களின் உதவியுடன் கண்டு பிடிக்கும் இந்த தம்பதியரில் பெரும பாலானோருக்கு ஏற்கனவே பெண குழந்தைகள் இருப்பார்கள். எனவே தங்களது மூன்றாவது அல்லது நான்காவது குழந்தையாவது ஆணாக இருக்கவேண்டும் என விரும்பி கருவில் இருப்பது பெண்ணானால் அதைக் கருக்கலைப்புச் செய்ய விரும்புகின்றனர்.

இதற்கான காரணங்கள் பல உண்டு என்றாலும் பெண்குழந்தைகளுக்கு மாப்பிள்ளை தேடுவது சிரமம் என இன்னும் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் தங்களது குடும்பப் பேரை ஏற்றுக்கொள்ள ஆண்குழந்தைகளை நாடுகின்றனர். இன்னும் சிலர் ஆண்குழந்தையை வளர்க்கும் அனுபவத்தை விரும்பி பெண்கருவை கலைக்க முயலுகின்றனர்.

பிரசவத்திற்கு முன் கருவில் இருப்பதைக் கண்டறிய மருத்துவத்துறையில் பிரிநேடல் டயாக்னஸ்டிக் என்ற நுட்பமான பரிசோதனை முறை உள்ளது. இதைப பயன்படுத்தி கருவில் இருப்பது ஆண்குழந்தையா, பெண்குழந்தையா என்பதைக் கண்டறிய முடியும்.

### ஆணும் பெண்ணும் சரிசமம்

பெண் என்றால் கேவலம் இல்லை. ஆண் எப்படி ஒரு மனிதனோ அதேபோல் பெண்ணும் ஒரு மனுசி என்பதை மறக்கக் கூடாது. ஆண், பெண் இருவரும் சமம். ஒரு ஆண் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் ஒரு பெண் செய்வதோடு மட்டுமன்றி ஓர் ஆணுக்குத் தாயாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் பாசத்துடன் கவனித்து ஒரு குடும்பத்தை திறம்பட நிர்வகிக்கும் திறமை படைத்தவள்.

21 ஆம் நூற்றாண்டில் அடி எடுத்து வைக்கும் நேரத்தில் அறிவியல் பல்வேறு கூறுகளில் அசுர வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கும் இந்தக்கால கட்டத்தில் இன்னும் கிராமப்புறங்களில் பெண் சிசுக்களை அழிக்கும் பாமரத்தனமான பத்தாம் பசலித்தனமான கொடிய சமூகப் பழக்கத்துக்கு சட்டத்தின் மூலமும் அறியாமையால் இயங்கும் அந்தச் சமுதாயத்திற்கு மனமாற்றம் ஏற்படுத்துவதன் மூலமும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஆகவே பெண்ணைத் தெய்வமாக மதித்து வழிபடாவிட்டாலும் பரவாயில்லை. பெண்தானே என்று கேவலமாக நடத்தாமல் சமமாக நடத்தினால் போதுமானது. பெண் இனத்தை அழிக்காமல் காப்பாற்றினாலே பெண் சமுதாயத்திற்குப் பெரிய சேவை செய்தது போல் ஆகும். □

**எஸ்.சர்வேஸ்**

---

# ஜனாதிபதியின் அவசர புத்தியால் அரசின் திட்டங்களை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை-மிலிந்த

(ராகம)

குறுகிய கால இடைவெளியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதனால், அரசின் திட்டங்கள் முழுமையாக நிறைவேறவில்லை என முன்னாள் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட கவலை தெரிவித்துள்ளார்.



கத்தொட்டுவ நவநகரப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய மிலிந்த,

நாட்டினை அபிவிருத்திப் பாதையில் கட்டியெழுப்புவதற்கு அரசு பலதிட்டங்களைத் தீட்டியிருந்தது, ஒரு அரசின் ஆட்சிக்காலமான 6 ஆண்டுகளுக்கு இத்திட்டம் நடைமுறைபபடுத்தக் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது ஆனால், அரசின் ஆயுள் காலத்தை ஜனாதிபதி 2ஆண்டுகளிலேயே முடித்துவிட்டார். இதனால் பல திட்டங்கள் முடங்கிவிட்டன.

எனினும், ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனது ஆட்சிக்காலத்தில் இளையவர்களின் வீண் உயிரிழப்புக்களை நிறுத்தியுள்ளதுடன் நீண்ட கால யுததத்தினை நிறுத்தியுள்ளது.

இநநிலை தொடர்வதற்கு இலங்கையின் அரசியல் அமைப்பு இடம் கொடுக்கவில்லை. இலங்கையின் அரசியல் அமைப்பின் தன்மையால் நாட்டில் நிரந்தர தீர்வை உருவாக்குவது கடினம் என்றார்.

(உ-61,4)

# வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வன்னிமாவட்ட வேட்பாளர்களுக்கு நேற்று முன்தினம் முதல் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வேட்பாளர்கள் மீதான படுகொலை முயற்சிச சம்பவங்கள் அதிகரித்து வருகிறதையடுத்து வேட்பாளர்கள் மத்தியில் பீதிநிலை தோன்றியுள்ளது. இதனையடுத்து, வன்னி மாவட்ட வேட்பாளர்கள் விடுக்துள்ள கோரிக்கைகளின் பேரிலேயே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வன்னிமாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி, புளொட், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஸ் அணி), தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கு தலா இரு பொலிஸார் வீதம் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(உ-61.4)

# பிரபா - கருணா விரிசல் குறித்து கருத்து கூறுவது எமது பாணியல்ல

**அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு**

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுள் நிலவும் உட்பூசல்களைப் பற்றி விடுதலைப்புலிகள் விரும்பத்தகாத கருத்துக்களை கூறியிருந்தும், நானோ அல்லது எனது கட்சியோ பிரபாகரனுக்கும் - கருணாவிற்கும் இடையே எழுந்துள்ள விரிசல்கள் பற்றி எதுவித கருத்துக்களையும் கூறப்போவதில்லை என முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கிடையே நிலவிவரும் வேறுபாடுகள் பற்றி தேவையற்ற கருத்துக்களைக் கூறிய புலிகளையோ அல்லது வேறுகட்சிகளின் உட்பூசல்களையோ பற்றிக் கருதததுத் தெரிவிப்பது எமது பாணியல்ல எனத் தெரிவித்த ஹக்கீம், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபடுவதே முக்கியம் எனத் தெரிவித்தார்.

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்க வேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு. பெரடல் அமைப்பினுள் சமூகத்தை மையமாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கமே எமக்குத் தேவை என்றும் ஹக்கீம் கூறினார்.

(ந-6)

# வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி வழமைக்குத் திரும்பியது

(கொழும்பு)

வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அரசாங்க அச்சகர் நிவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.


கொழும்பில் கடந்த சில நாட்களாக நிலவிவந்த நீர் மற்றும் மின் விநியோகத்தடைகள் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக அரசாங்க அச்சகத்தில் இடம பெற்று வந்த வாக்காளர் சீட்டு அச்சிடும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எனினும், வாக்குச் சீட்டுகள் அச்சிடவேண்டியதன் ஆவசியத்தைத் கருத்தில் கொண்டு மேற்கொண்ட துரித நீர், மின் விநியோக நடவடிக்கைகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் அச்சிடும் பணிகள் வழமைக்குத் திரும்பியிருப்பதாக அச்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-61,4)

# ஜீன் பேட்ரண்ட் அரிஸ்டைட்டின் வீழ்ச்சியும் தடுமாறும் ஹெயிட்டியின் எதிர்காலமும்

ஹெயிட்டியைச் சூழ்ந்திருக்கும் பதற்றமும் நிச்சயமற்ற எதிர்காலமும் நிதானமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமேயானால் அங்கே நிலைகொண்டிருக்கும் சர்வதேச சமூகத்தினர் நீண்டகால வேலைத் திட்டங்களின்படி செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுவார்களேயானால் அது பெரிதும் சாத்தியப்படும். இல்லையேல்



மேற்குலக எல்லைகளுக்குள்ளிருக்கும் இந்த வறியநாட்டின் தலைவிதி என்பது நிர்ணயிக்கப்படாத தொடர்சிக்கல்களுள் அமிழ்ந்து போகும் சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுவதாக ராஜதந்திரிகள் எச்சரிக்கின்றனர்.

ஹெயிட்டியின் தற்போதைய நிலை அதன் எதிர்காலம் என்பவற்றை ஆராய முன்பாக இந்த சிறிய கரிபியன் நாட்டின் அண்மிய இறந்தகாலத்தைச் சற்று புரட்டிப் பாாப்போம்.

1804ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிடம இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக்கொண்ட வறியவர்களாவர். தலைநகரமான போட்ஸ் ஓபிறின்ஸ் மிக அதிகமான சேரிப்பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் தான் தற்பொழுது பதவியில் இருநது வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி ஜீன் பேட்றன் அரிஸ்டைட் தனது பணியை ஆரம்பித்தார்.

### பேபி டொக்கின் ஆட்சி

"பேபி டொக்" என்று பொதுவாக அழைக்கப்பட்ட ஜீன் குளோடடின சர்வாதிகார ஆட்சி 1980களில் ஹெயிட்டியில் நடைபெற்றுவந்தது. "பப்பா டொக்" என்று ஹெயிட்டியில் அழைப்பட்டு வந்த இவரது தந்தையாரிடமிருந்து ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்ட இவர் மிகக் கொடூரமான முறையில் ஹெயிட்டியர்களை ஆண்டுவந்தார்.






பேபி டொக்கின் ஆட்சியை விமர்சிக்கப் பொதுவாக எல்லோரும் அஞ்சினர். அப்படி யாராவது விமர்சித்தால் அவர் உயிர்வாழ்வதென்பது மிகவும் ஆபூர்வமானதொரு விடயமாகவே காணப்பட்டது.

இவரது ஆடசிக்காலத்தில் மாற்றுக்கருத்துடையவர்கள் அரசியல் எதிரிகள், சுதந்திரமான பத்திரிகையாளர்கள் என்போர் மர்மமான முறையில் காணமாற்போனார்கள். மக்கள் வாய்திறக்கவே அஞ்சினர்.

### அரிஸ்டைட்டின் ஆரம்பம்



இவ்வாறான ஒரு பயங்கர கால கட்டத்தில்தான் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் சலேஷியன் சபைக்குருவான அரிஸ்டைட போட்ஸ் ஓ பிரின்ஸின் சேரிப்பகுதிகளில் அரசாங்கத்தின் குரூரத்தனங்களை மிகத்துணிகரமான முறையில் எதிர்த்துப் பிரசங்கங்களை மேற்கொண்டார்.

ஊடகங்களும், பொது அமைப்புக்களும் தங்கள் வால்களைச் சுருட்டியபடி உறங்கிக்கொண்டிருந்த போது, ஒரு கத்தோலிக்க மத குருவின் குரல் மிகத் துணிகரமாகச் சேரிகளிலெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அதிகார துஷ்பிரயோகத்தை அவர் வன்மையாகக் கண்டித்தார். அதிகார வர்க்கமும், பணக்காரர்களும் ஒன்று சேர்ந்துகொண்டு ஏழைகளின் முதுகில் சவாரி செய்வதை அஞ்சாமல் எதிர்த்தார். "காயப்பட்ட ஒரு சிங்கத்தின கர்ஜனையை அவருடைய போதனைகளில் கண்டேன்" என்று மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் உறுப்பினர் "ஆன புள்ளர்" நினைவு கூர்ந்தார்.

### குருத்துவத்தில் இருந்து வெளியேற்றம்

ஹெயிட்டியின் எதிர்காலத்தை முன்னிட்டு அவர் மிகுந்த ஈடுபாட்டுடன் அரசியலில் ஈடுபட்டுவந்ததால் 1988ஆம் ஆண்டு சலேசியன் சபையில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

கத்தோலிக்க மதகுரு என்பதன் காரணமாக அவர்மீது கைவைக்கத் தயக்கம் கொண்டிருந்த பேபி டொக்கின் அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்மீது நன்கு திட்டமிட்ட முறையில் கொலை முயற்சி ஒன்றை மேற்கொண்டது. ஆயினும் அதிர்ஷ்டவசமாக அக்கொலை முயற்சியிலிருந்து அரிஸ்டைட் தப்பினார். இதன்பொழுது அவர் தனது நண்பர்களுடன் தங்கியிருந்ததாகக்கருதப்படும் தேவாலயம் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### ஆட்சியில் அரிஸ்டைட்

இதன் பிற்பாடு ஹெயிட்டியிலும் ஹெயிட்டியைச் சூழவுள்ள நாடுகளிலும் பேபி டொக்கின் ஆட்சிக்கெதிரான உணர்வலைகளின் வெளிப்பாடுகள் அதிகரித்துவந்ததன காரணமாக அவர் ஆட்சியைக் கைவிட்டு வெளிநாடு ஒன்றிற்குத் தப்பியோடினார்.

பேபி டொக் தப்பியோடி நான்கு வருடங்களின் பிற்பாடு 1990ல் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஜீன்பேட்ரண்ட் அரிஸ்டைட் ஆட்சி பீடம் ஏறினார். ஹெயிட்டியின் 200 வருட சுதந்திர வரலாற்றில் இடம் பெற்ற சுதந்திரமான தேர்தலாக இத்தேர்தலே இன்றும் கணிக்கப் பட்டுவருகிறது.

### சதிப்புரட்சி

அவர் ஆட்சியேற்ற ஒன்பது மாத காலத்தினுள் இராணுவ சதிப்புரட்சி மூலம் அவர் ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார். ஆட்சியில் அனுபவமில்லாத அரிஸ்டைட் இராணுவத்தில் அதிரடியாக மேற்கொண்ட சில மாற்றங்களும் முந்நாள் சர்வாதிகாரியான பேபி டொக்கிற்கு ஆதரவான இராணுவ அதிகாரிகளின் சதித்திட்டங்களுமே இப்பதவி கவிழ்ப்புக்குக் காரணமென்று கருதப்படுகிறது.



ஆயினும் அவருடைய ஒன்பது மாதகால ஆட்சியில் அவருடைய மனோ நிலையில் பாரிய மாறுபாடுகள் ஏற்படத் தொடங்கியிருந்தன. ஏனெனில் உலகின் மிகப்பலம் பொருந்திய வல்லரசு அவருக்குப் பின்னால் வந்து தோள்கொடுத்துத் தக்கதருணத்திற்காக காத்திருந்தது.



1994ம் ஆண்டில் சுமார் 20,000 அமெரிக்கத் துருப்பினரின் படைத்துணையோடு அரிஸ்டைட் மீண்டும் ஆட்சிபீடம் ஏறினார்.

மீண்டும் ஆடசிக்குவந்த அரிஸ்டைட் ஹெயிட்டியின் கட்டுப்பாடு முழுவதுமாகத் தனது கைகளிலேயே இருக்கவேண்டும் என்று விரும்பினார். தன்னைச் சுற்றியிருப்பவர்கள் தனக்குத் தலையாட்டுபவர்களாக இருக்கவேண்டும் என்று பார்த்துக்கொண்டார். தொடர்ந்தும் தானே பதவியிலிருப்பது எப்படி என்பதில் அதிக கவனம் செலுத்தினார்.

### அரிஸ்டைட்டின் தவறுகள்

இவரது மனோநிலையை அவதானித்த இவரது அதிகாரிகள் தங்களது நிலைகளை உயர்த்திக கொள்வதற்காக இவருக்கு வால் பிடிக்கத் தொடங்கினர், மனித உரிமைகள் ஆர்வலர்களின் குற்றச்சாட்டுககளின்படி, தனது எதிரிகளைக் கவனிபபதற்கென்றே தனியான குண்டர் படையொன்றை அரிஸ்டைட் வைத்திருந்தார் என்றும் இக் குண்டர்படை சுதந்திர ஊடகங்களை இலக்குவைத்தன் என்றும் அறிய முடிகிறது.

அடிப்படையில் மதகுருவான அரிஸ்டைட் ஒரு அராஜக வாதியாக மாறினார் என்று அமெரிக்க ராஜ தந்திரியும் அவரது முன்னாள் ஆலோசகருமான றெபேட்வைற் சொல்லுகிறார். 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மிகவும் முறைகேடான விதத்தில் 92வீத வாக்குகளைப் பெற்றதாக வெளியுலகிற்கு அரிஸ்டைட் காண்பித்தார்.

உண்மையில் மிகவும் முறைகேடான விதத்தில் முடிவுகளை அவர் திரிபுபடுத்தி இத்தகவல்களை வழங்கிய போது அவரை ஆதரிததவர்களே அவரை வெறுக்கத் தொடங்கினர். ஒரு காலத்தில் ஏழைகளின் தோழனாக எண்ணப்பட்ட அரிஸ்டைட்டுக்கு உண்மையில் என்ன நடந்தது?.....

(தொடர்ச்சி நாளை)

---

வன்முறைகள் தொடர்பில் விளக்கமளிக்க

## மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு

(கொழும்பு)

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்ட நாள் முதல், இலங்கையின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற தேர்தல் வனமுறைகள் தொடர்பாக விளக்க வருமாறு, மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளில் இருவர் கொல்லப்பட்ட விவகாரம் கொடர்பாக காம் அகிக கவனம் செலுத்த விரும்புவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, வடக்கு-கிழக்குப் பகுதி உட்பட இலங்கையின் சகல பகுதிகளிலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கடுமையான பாதுகாப்பு வழங்க தாம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸ்மா அதிபர், சில வேட்பாளர்கள் அத்தகைய பாதுகாபபு எதனையும் ஏற்பதற்கு மறுப்புத தெரிவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(உ)

# பாகிஸ்தானின் தேடுதலில் அகப்படாமல் ஒஸாமா பின்லேடன் தப்பிச் சென்றார்

(காபூல்)

பாகிஸ்தானின் தேடுதல் நடவடிக்கையில் இருந்து அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் தப்பிச் சென்றுள்ளார் என்று ஆப்கானிஸ்தான் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் ஊடாக இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றதாக ஆப் கானிஸ்தான் மாகாண ஆளுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அல்கெய்டா இயக்கத்தலைவர் ஒஸாமா பின்லேடனுடன் மேலும் பலர் உயிருடன் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக 3 நாட்களுக்கு முன்னர் நம்பத்தகுந்த தகவல் கிடைத்ததாக நங்கர்ஸார் மாகாண ஆளுநர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் படையினரின் விசேட தேடுதல் முயற்சியின் போது தாம் தப்பிச் சென்றதாக தொலைநகல் மூலம் தனது சகாக்களுக்கு பின்லேடன் தெரிவித்துள்ளார். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (யே-9)

# மனித மூளைக்குள் மூன்று தையல் ஊசிகள்

(பெய்ஜிங்)

சீனாவில் நபரொருவரின் மூளைக்குள் இருந்து 3 தையல் ஊசிகளை டாக்டர்கள் வெற்றிகரமாக கடந்த வெள்ளியன்று அகற்றியுள்ளனர்.

குவோ என்னும் பெயருடைய இந்நபரின் மூளைக்குள் 29 வருடங்களாக இவ்வூசிகள் இருந்துள்ளன என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால்இவை எவ்விதம் மூளைக குள் சென்றன எனத் தமக்கு எதுவும் தெரியாது என்று அந்நபரின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

எனினும் பிரஸ்தாப நபர் குழந்தையாக இருந்தபோது, மண்டையோட்டு மென்சவ்வு பகுதியில் யாராவது இந்த ஊசிகளை ஒட்ட வைத்திருக்கலாம் என சத்திரசிகிச்சை மேற்கொண்ட டாக்டர்கள தெரிவித்தனர். மண்டையோட்டு பகுதி கடினமானது. இதற்கூடாக ஊசிகள் ஊடுருவியிருப்பது சாத்தியமறறது என்றும் கூறட் படுகிறது.

(ந)

# இஸ்ரேலியத் தாக்குதலில் 6 கெரில்லாக்கள் பலி

(ஜெருசலேம்)

நேற்று முன்தினம் பலஸ்தீன கெரில்லாக்கள் 2 ஜீப் வண்டிகளில் இஸ்ரேலிய இராணுவக் காவல் நிலையம் ஒன்றைத் தாக்குவதற்கு சென்ற போது இஸ்ரேலிய வீரர்களால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டு 6 பலஸ்தீனர்கள் கொல்லப் பட்டனர்.

இஸ்ரேலிய ஜீப் வண்டிகளைப் போன்று வர்ணம் பூசப் பட்ட 2 ஜீப் வண்டிகளில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்காகச் சென்ற பலஸ்தீன கெரில்லாக்கள் மீது இஸ்ரேலிய வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால், ஜீப் வண்டிகள் வெடித்து 6 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஹமாஸ் இயக்கம், இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம், அல்அக்ஸா மாவீரர்படை ஆகிய மூன்றும் இணைந்து எடுத்த இம்முயற்சி நேற்று முன்தினம் காஸாப் பிரதேச எல்லைக்கருகில் இடம்பெற்றது.

இஸ்ரேலுடன் யுத்த நிறுத்ததைக் கடைப்பிடிக்குமாறு பலஸ்தீன அதிகாரசபை விடுத்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டு இந்த இயக்கங்கள் கூட்டுச் சேர்ந்து நடத்திய இந்தத்தாக்குதால் காஸா பிரதேசத்தில் இருந்து வெளியேறுவது என்ற இஸ்ரேலின் உடன்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கலாம் என்று அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது. (யே-9)

# சிறைச் சீர்திருத்தத்திற்கெதிராக 50 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம்

(அங்காரா)

துருக்கியில் அரசாங்கச் சிறையை சீர் திருத்துவதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவிலான அரசாங்கத் திட்டங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்து, சுமார் 50 ஆயிரம் பேர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம நடத்தியதாக உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் தெரிவித்தன.

அனேகமாக தொழிற்சங்கங்களையும் இடதுசாரிக் குழுக்களையும் சேர்ந்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத் துறையில் ஏகபோக முகாமைத்துவத்திற்கென தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல் சட்டமூலம் ஒன்றை ஆட்சேபித்து பேரணி ஒன்றையும் நடத்தினார்கள். (யே-09)

## ஒப்பந்தம் சாத்தியமில்லை

( வாஷிங்டன்)

வடகொரியா தனது அணுவாயுத திட்டத்தை முழுமையாக கைவிட்டாலன்றி அதனுடன் ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்ளப்பட மாட்டாது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் தென்கொரிய வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின் பவல் இவ்வாறு தெரிவித்தார். (யே-9)

# முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் மீண்டும் கண்டனம் தெரிவிப்பு

(கராரே)

ஹெயிட்டியில் இருந்து வெளியேறிய முந்நாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் தமது வெளியேற்றம் ஒரு பாரதூரமான ஆட்கடத்தல் என்று மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமது தேசிய அரண்மனையைச் சுற்றிலும் வெள்ளையர்கள் முற்றுகையிட்டு தம்மை பலவந்தமாக விமானத்தில் ஏற்றி வெளிநாட்டுக்கு கொண்டு சென்றதாக அவர் கையடக்கத் தொலைபேசி மூலம் கலிபோர்ணியாவின் வானொலி நிலையம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி இரவு இடம் பெற்ற சதிப் புரட்சியில் இராஜதந்திரம் என்ற போர்வையில் இந்த ஆட்கடத்தல் பயங்கரவாதச் சம்பவம் இடம்பெற்றதாக ஜனாதிபதி அரிஸ்ரைட் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்கா அரிஸ்ரைட்டின் கூற்றை வனமையாக நிராகரித்துள்ளது.

புஷ்நிர்வாகம் தற்போதைய ஹெயிட்டி நெருக்கடி குறித்து வெளியிட்ட தகவலில் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் ஹெயிட்டியில் இடம் பெற்ற இராணுவ சதிப் புரட்சி ஒன்றின் போது பதவியிலி ருந்து கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி அரிஸ்ரைட்டை 20ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்நாள் மதகுருவான அரிஸ்ரைட் ஹெயிட்டியில் ஊழல்கள், வறுமைகள், தேர்தல் மோசடி ஆகியன ஏற்படுவதற்கு காரணமாக இருந்தார் என்று குற்றம் சாட்டப்படடு, அதன் காரணமாக அவர் பொது மக்களின் ஆதரவை இழந்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (யே-9)



ஆலிவ் ஆமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, ஒரிஸாவில் புரி கடற்கரையில் ஆமை போன்ற மணல் சிற்பத்தை வடிக்கிறார் மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்.



# லிபியா அணுவாயுத உபகரணங்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தது

(திரிப்போலி)

லிபியா அணுவாயுத பரிகரணத்துக்கு உடன்படுவதாக விடுத்த உறுதிமொழிக்கு அமைய அதன் வசமுள்ள அணுவாயுத உற்பத்தி உபகரணங்களையும் நீண்டதூர ஏவுகணைகளையும் ரொக்கெற் லோஞ்சர்களையும் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

லிபியாவில் இருந்து பேரழிவைத் தரும் ஆயுதங்களைக் கழைவதற்கான உடன்படிக்கையின் ஒரு பகுதியான 500 மெற்றிக் தொன் எடையுள்ள அணுவாயுத உற்பத்தி உபகரணங்கள் அடங்கிய கப்பல் ஒன்று நேற்று முன்தினம் லிபியாவில் இருந்து புறப் பட்டு அமெரிக்காவின் இரகசிய இடம் ஒன்றுக்குச் சென்றிருப்பதாக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச் சபைப் பேச்சாளர் தெரிவித்தார். (யே-09)

## திடீர் சூறாவளியில் சிக்கி படகு மூழ்கியதில் 4 பேர் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் டைக்ஹிமோர்த் துறைமுகத்தில் சுற்றுலாப் பயணிகள் சென்று கொண்டிருந்த படகு ஒன்று திடீரென அங்கு ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி மூழ்கியதனால் 4 பேர் உயிரிழந்தனர். இந்தப் படகுச் சேவையை தொண்டர் அடிப்படையில் செயற்படும் அமைப்பு ஒன்று நடாத்தி வருகிறது.

கரையோரத்தில் தங்கியிருந்த மாலுமிகள் சிலர் துறைமுகத்தை நோக்கி சூறாவளி வருவதைக் கண்டதும் படகுக்கு எச்சரிக்கை விடுத்தார்கள் என்றும் உடனடியாகத் துறைமுகத்துக்கு படகு திரும்ப முயன்ற போதிலும் சூறாவளி அதன் மீது மோதி படகை மூழ்கடித்து விட்டது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (யே-9)

# பிரி. படைகளின் தாக்குதலில் கெரிலாக்கள் மூவர் பலி

(லண்டன்)

ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் படைகளும் ஈராக்கிய கிளர்ச்சி வாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 3 ஈராக்கிய கிளர்ச்சி வாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த மோதலின போது 7 பிரிட்டிஷ் வீரர்கள் காயங்களுக்குள்ளானார்கள் என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஈராக்கின் ஆளும் சபையைச்சேர்ந்த தூதுக்குழு ஒன்று அந்த நாட்டின் ஷியா மதததலைவர்களின் உதவியாளர்களை சந்தித்து இடைக் கால அரசியல் யாப்பு ஒன்றை அமுல் செய்வது குறித்து பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளது.

இந்த அரசியல் யாப்பு இன்று கைச் சாத்திடப்படலாம் என்று ஆளும சபை உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்திருந்த போதிலும், ஈராக்கில் 60 சதவீதமான ஷியா முஸ்லிம்கள் மத்தியில் பாரிய செலவாக்கை கொண்டுள்ள அயதுல்லா அலி- அல்ஹிஸலானியின் அங்கீகாரம் கிடைத்த பின்னரே புதிய அரசியல் யாப்பை அமுல் படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (யே-9)

# கொலின் பவல் விரைவில் இந்தியாவுக்கு விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் விரைவில் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 14ஆம்திகதி ஆரம்பிக்கும் தெற்காசிய நாடுகளுக்கான விஜயத்தின்போதே அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இருநாடுகளுக்குமிடையிலான நட்புறவில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த உறவை மேலும் மேமபடுத்துவதற்காக அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயும் நோக்கில் இந்த விஜயம் மேற்கொள்ளபபடுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய விஜயத்தின் போது கொலின் பவல் அரசியல் தலைவர்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

இரு தரப்பினருக்குமிடையிலான நட்புறவும் மற்றும் பாதுகாப்பு பற்றி இநதப்பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்படுகின்றது. (யே-9)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி -குறள்

வலம்புரி

## மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்

இன்று சர்வதேச மகளிர் தினம். அடக்குமுறைகளை உடைத்தெறிவதற்காகப் பெண்கள் இத் தினத்தைச் சர்வதேச ரீதியில் அனுஷ்டித்து வருகின்றனர்.

பெண்கள் என்றால் அவர்கள் போகப் பொருள்கள் என்ற மடைமைத்தனத்தை உடைத்தெறிந்து ஆண்களிற்குச் சரிநிகராகப் பெண்களும் இப்பூமியில் வாழமுடியும் என்பதை நிலைநாட்டுவதற்காகச் சர்வதேச மகளிர் தினத்தில் உலகுவாழ்ப் பெண்கள் உறுதியெடுத்துக் கொள்கின்றனர்.

பெண்கள் அடக்கப்படுகின்றார்கள். அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து பெண்களுக்காகக் குரல் கொடுத்த கவிஞன் பாரதி இன்றைய நாளில் நினைவுகூர வேண்டியவன்.

பெண் அடிமைத்தனத்தை நீக்கி புதுமைப் பெண்களைக் காண விளைந்த புலவன் பாரதி, வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதரை இனங்கண்டு அவர்களுக்குச் சாட்டையடி கொடுத்தான். பெண்களை விழிப்படைய வைப்பதன்மூலமே பெண்ணுரிமையைப் பாதுகாக்க முடியும் எனக் கருதி பெண்களின் கல்விக்கு முதலிடம் கொடுத்தான்.

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடைமையைக் கொளுத்துவோம் எனக் குரல்தந்த பாரதி, பெண்களை ஆற்றுப்படுத்த முனைந்து நாணமும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் எனப் பகர்ந்து பெண்களின் மனப்பலவீனத்தை போக்க முற்பட்டான்.

பெண்ணடிமைக்கு எதிராகப் பாட்டுக்கொரு புலவன் போட்ட அடித்தளமே இன்று சர்வதேசம் முழுவதும் ஓங்கி ஒலிக்கிறது. சர்வதேச மகளிர் தினத்திற்கு வித்திட்டதென்றால் அஃது மிகையாகாது.

பெண்கள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அவர்கள் ஆண்களுக்கு ஈடு இணையாகப் பல் துறைகளிலும் விளங்கவேண்டும். இதுவே மகளிர் தினத்தின் உன்னத இலக்காக இருக்கவேண்டும். தமிழ்கூறும் நல்லுலகைப் பொறுத்தவரை பெண்ணடிமைத்தனம், தமிழ்நாட்டில் இன்றும் கோலோச்சியிருக்கினற போதிலும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பெண்களுக்கான உரிமை என்பது பாசத்தோடு-அன்போடு கட்டுண்டிருப்பதை யாருமே மறுத்துவிட முடியாது. பெற்றதாயின் உரிமையைப் பிள்ளைகள் அறுத்தெடுக்கவில்லை. கட்டிய மனைவியின் சுதந்திரத்தைக் கணவன் கத்தரிக்கவில்லை.

ஆனால், தமிழர் பண்பாட்டின் விழுமியங்கள் தரும் குடும்ப உறவே இங்கும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதுபோல காட்சியளிக்கின்றன. இது வெறும் மாயையே அன்றி நிஜமன்று.

மேலைத்தேய நாடுகளின் கட்டுமீறிய போக்குகளோடு எமது பெண்களின் உரிமைகளை ஒப்பிடுவது எமது கலாசாரத்தின் உயர்வுக்கு நாம் செய்யும் துரோகமாக இருக்கும். பெண்களின் உரிமை என்பது ஒழுக்கத்தின் வரம்பை மீறுவது என யாரேனும் கருதுவார்கள் ஆயின், அஃது மிகப் பெரும் பாரதூரமான விளைவுகளையே தரும்.

பெண்களுக்குப் பெருமைசேர்ப்பது ஒழுக்கம் என்பதை எவருமே மறந்துவிடமுடியாது. குறிப்பாகப் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் இதனைத் தெளிவாக உணர்ந்துகொள்வது அவசியமாகும்.

பெண்களின் கற்பில் திறனைக் காண்பதற்காக நம் முன்னோர்கள் வகுத்த பாதைகளை அடிமைத் தனமெனக் கருதப்படுமாயின் அங்கு ஒழுக்கமீறல்களே மலிந்துபோகும்.

ஆணுக்குப் பெண்கள் சரிசமன் என்ற வர்தம் பல்துறைக்கும் பொருந்துமாயினும், கற்பெனும் சொற்திறம்பான்மை பெண்களுக்கே முதன்மையானதென்பதில் தர்க்கவாதங்கள் தேவையற்றவையாகும்.

எனவே, பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் பெண்களின் உரிமைக்காகக் குரல்கொடுப்பதோடு, பெண்களின் ஒழுக்கத்தை உயர்த்துவதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றபோதே மாதராய்பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் என்ற கவிஞனின் பாடல்வரிகள் அர்த்தம் பெறும்.

# புலிகளின் உயர்ந்த கொள்கைக்கு கருணா துரோகமிழைத்து விட்டார்

## அரசியல் ஆய்வாளர் எஸ்.ஜெயராஜ் கருத்து

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று கிழக்கு மாகாண மக்களின் பேரால் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயற்சிக்கும் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு விரோதமாக செயற்படுவாரா? அல்லது அவர்களுடைய கொள்கைகளை ஏற்றே செயற்படுவாரா? என்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் தோன்றியிருப்பதாக கனடாவில் தற்போது இருக்கும் இலங்கையின் அரசியல் ஆய்வாளர் ரீ.பி. எஸ் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தின் கொள்கைகளுககுப் புறம்பாக சில தீயசக்திகளின் தூண்டுதல்களினால் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கேணல் கருணா தமிழீழ மக்களின் ஒற்றுமைக்கும் இலட்சியத்திற்கும் துரோகமிழைத்து தனியாகப் பிரிந்து செல்ல முற்பட்டுள்ளார்.

இதனால் புலிகள் இவரை தமது அமைப்பில் இருந்து உத்தியோகபூர்வமாக நீக்கி அவருடைய இடத்திற்கு அதிகாரபூர்வ பிரதிநிதிகளை நியமித்துள்ளனர்.

இதனால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலவரங்கள் தொடர்பாக அரசியல் ஆய்வாளர் எஸ்.ஜெயராஜ் பி.பி.சி செய்திச்சேவைக்கு வழங்கிய விசேட அரசியல் கண்ணோட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்தனது கருத்தோட்டத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமக்கென இருந்த பொதுவான ஒரு எதிரியை எதிர்த்தே இதுவரை காலமும் போராடி வந்துள்ளது.. இதன்போது எதிரிகளை அழிக்க வேண்டும், இலட்சியத்தை அடையவேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்து வந்தது. எதிரிகளை எவ்வாறு சமாளிப்பது என்பதுவே அவர்கள் அந்த நேரங்களில் எதிர்கொண்ட பாரிய பிரச்சினையாகும். இதனால் அதிகார ரீதியில் இவர்களிடம் எந்தவிதமான போட்டிகளும் ஏற்படவில்லை. தியாக உணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டுவந்துள்ளனர்.

ஆனால் இவ் அர்ப்பணிப்புகளின் பயனாக உருவான மிகப் பெரிய பலத்தின் வெற்றிகள் புலிகளை சமாதானப் பாதைக்கு இட்டுச்சென்றது. இதனால் யுத்த காலத்தில் பிராந்திய தலைமைகளை சுயாதீனமாக செயற்படவிட்டிருந்தது போல யுத்தநிறுத்த காலத்திலும் செயற்படவிட முடியாத சூழ்நிலை புலிகளின் மத்திய தலைமைக்கு ஏற்பட்டது. காரணம யுத்த நிறுத்தத்தைப் பேணி புலிகளின் அரசியல் வாக்குறுதிகளைக் கட்டிக்காக்கவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. இதனால் தலைமையின் பணிப்பின் பேரில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் பல்வேறுபட்ட அரசியல் பணிகளுக்காகப் போராளிகள் செயற்பட்டு வந்தனர்.

இந்த நிலை கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்டது. தலைமையின் கொள்கைக்கு அமைவாக அங்கு பல பிரமுகர்கள் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் யுத்த காலத்தில் கருணாவுக்கு இருந்த அதிகாரம் சமாதான காலத்தில் இருக்கவில்லை. சமாதான சூழ்நிலை அவரை சுயாதீனமாக இயங்கவும் இடமளிக்கவில்லை. இதனால் தனக்கென ஒரு அதிகாரத்தை தலைவர் வே. பிரபாகரனின் தலைமையின் கீழ் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்தார். தனது அதிகாரத்தின் கீழேயே கிழக்குமாகாணம் செயற்படவேண்டும் என்ற கொள்கை அவரிடம் உருவானது. இதனால் தலைமை நியமித்த கிழக்கு மாகாணத்திற்குரிய அரசியல் நீதி, நிர்வாகம் புலனாய்வு போன்ற துறைகளை நிராகரித்தார். தனக்கென ஒரு சில அதிகாரங்களை தலைமையிடம் கோரினார்.

இவ்வாறு தமிழீழத் தேசியக்கொள்கையில் இருந்து கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பது கிழக்கு மாகாண மக்களால் ஏற்கமுடியாத விடயமாக இருந்தது. இதனைச் சமாளிப்பதற்காக கிழக்கு மாகாண மக்களின் மன உணர்வுகளை தலைமை மதிக்கவில்லை என்ற ஒரு வாதத்தை தனக்குரிய நியாயமாக மாற்றியமைத்தார். இதனால் கிழக்கு மக்களை தன்வசம் ஈர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பிரிந்து சென்று கிழக்கு மாகாணத்தில் தன்கென ஓர் சுய ஆட்சியை நிறுவும் விதமாக அமைந்துள்ள கோரிக்கைகளை விளக்கவருமாறு தலைமை அவரை அழைத்தும் அவர் அதற்கு மறுத்துவிட்டார்.

தனது கோரிக்கையை அடையவேண்டும் என்ற உறுதியில் தீவிரவாதப் போக்கினைக் கடைப்பிடித்து பகிரங்கமான அறிக்கைகளையும் விடத்தொடங்கினார். இது தமிழீழ விடுதலைப்புலிகளின் அடிப்படைக்கொள்கைகளுக்குப் புறம்பாகக் காணப்பட்டது. அத்துடன் தமிழினத்தின் ஒன்றுபட்ட உணர்வுகளை மழுங்கடித்து ஒற்றுமையைக் குலைக்கும் செயற்பாடாகவும் காணப்பட்டது.

இதனால் விடுதலைப்புலிகள் தமது அமைப்பில் இருந்து கருணாவை உத்தியோகபூர்வமாக நீக்கியுள்ளனர். கருணாவினால் உருவாக்கப்பட்ட இச் சர்ச்சை தோன்றியுள்ள காலகட்டம் ஓர் முக்கியமான பகுதியாகும். உலகமே தமிழினத்தின் ஒற்றுமையை உற்றுப்பார்க்கும் தேர்தல் சூழ்நிலை இது என்பதால் மக்கள் மத்தியில் இந நிகழ்வுகள் பெரும் குழப்பங்களை உருவாக்கி இருக்கிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து தற்பொழுது பிரிந்து சென்றுள்ள கருணா எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளின் விரோதியாகச் செயற்படுவாரா? அல்லது விடுதலைப் புலிகளின் கொள்கைகளுடன் ஒத்துப்போவாரா? எனப் பல கேள்விக்குறிகள் மககள் மத்தியில் தோன்றியுள்ளது. இந்தப் பிரச்சினை ஆயுத முனையில் தீர்வு காணப்படும் ஓர் நிலையை உருவாக்கக்கூடாது. அத்துடன் மக்கள் மத்தியில் பிரதேச ரீதியான விரோதங்களை உருவாக்கி விடவும் கூடாது என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு இப்பிரச்சினையை பிராந்திய ரீதியாக மக்களை வேறுபடுத்தும் விடயமாக பார்க்கவில்லை. இது பிராந்திய ரீதியில் மக்களை வேறுபடுத்தி தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்க முயலும் துரோகச செயலாகவே கணிப்பிட்டுள்ளார்கள். இதனால் மக்கள் பதற்றம் அடையத்தேவையில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-63,4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நம்மிடம் உள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி மற்றவர்கள் தாங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வது தான்.

மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும்போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்

சுவாமி விவேகானந்தர்.

## பெண்ணுரிமையை வலியுறுத்தி மாபெரும் வாகனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினமான இன்று திங்கட்கிழமை "பெண்களின் உரிமைகள்" தொடர்பில் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்து யாழ்.குடாநாட்டில் மாபெரும் வாகன அணிவகுப்பொன்றை நடத்தவுள்ளன.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம், மனித உரிமைகள் ஆணைக்குழு, யுனிசெவ் நிறுவனம், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, கியூடெக் மற்றும் சாந்திகம் உட்பட சுமார் 10ற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் இணைந்து மாபெரும் வாகன அணிவகுப்பை நடத்தவுள்ள அதேநேரம், அணிவகுப்புச் செல்லும் இடங்களிலும் "பெண்களின் உரிமைகள்" தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளும் நடாத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே-19)

## சட்டவிரோதமாக பசுமாடு வெட்டப்படுகிறதாம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை டேவிட் வீதியில் சட்டவிரோதமாக பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் யாழ். மாநகர சபையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக மாடுகளை வெட்டும் கும்பலைக் கைது செய்ய பொலிஸாரும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது. (உ-51)

## தவக்கால சிந்தனை-13

அன்பு செய்பவருக்கே அள்ளிக்கொடுத்தல் என்பது பண்பாகாது. இது இயேசு காட்டிய வழியும் அல்ல மதிப்பீடும் அல்ல. இதை ஒரு வியாபாரம் என்றே சொல்லலாம். இன்றைய சமுதாயத்தில் அறுசுவை உணவு இல்லையே அடுக்கு மாடி வீடு இல்லையே என ஏங்கும் உள்ளங்களை விட அன்புக்காய் ஏங்கும் உள்ளங்கள் தான் எத்தனை எத்தனை? சாதியின் பெயரால் ஒதுக்கப்பட்டவர்கள், ஏழைகளாய் அடக்குமுறைக்கு ஆளானோர் எத்தனை பேர்! இப்படிப்பட்டோரை இனங்கண்டு, ஒரு அன்புச் சொல், ஒரு ஆறுதலான மொழி, தேவையில் உதவிக்கரம் நீட்டுதல், தோழமை உணர்வோடு பழகுதல் இவற்றை நாம் செய்யும்போதுதான் நாம் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்ற முடியும்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

## திருத்தம்

இன்றைய வலம்புரியின் 3ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'தமிழினத்தின் உரிமைக்குரலை உலகறியச் செய்ய வேண்டும்' என்ற செய்தியில் கஜேந்திரனின் படத்திற்குப் பதிலாக கஜேந்திரகுமாரன் படம் தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. (ஆ-ர்)

# வான்-சைக்கிள் விபத்தில் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஹையஸ் வானும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் மரணமானார்.

கே.கே.எஸ்.வீதியில் தாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகே நேற்று மாலை 4.00 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் சுப்பையா இராசையா (வயது-67) என்ற வயோதிபரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார். (ச)

## எரிக் சொல்ஹேய்ம் இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் இன்று இலங்கை வருகிறார். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அது தொடர்பாக ஆராயவே அவர் இலங்கை வரவுள்ளார்.(ச)

## அசம்பாவிதம்...

திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மிகுந்த எச்சரிக்கையுடனும், அவதானத்துடனும் செயற்படுத்தத் தொடங்கியுள்ளோம்.

கருணாவின் பிரச்சினை தனிப்பட்டது. அவரைத் தவிர ஏனைய அனைவரும் தலைவரின் பக்கமே உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் எவ்வித மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் தணிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (த)

# உடன்படிக்கை செய்வது குறித்து அரசிடம் கருணா கேட்கவில்லை -சிறில் ஹேரத்

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் செய்துகொண்ட போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை போன்று பிறிதொரு உடன்படிக்கை ஒன்றைத் தம்முடனும் செய்ய வேண்டும் என கருணா அரசாங்கத்திடம் கேட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மறுத்துள்ளார்.

புலிகளின் தலைமைப்பீடத்திற்கும், கிழக்கு மாகாணத்தளபதியாக இருந்த கருணாவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை காரணமாக பிரபாகரனுடன்செய்துகொள்ளப்பட்டது போன்ற புதியதோர் உடன்படிக்கையை அரசாங்கம் தன்னிடமும் செய்து கொள்ளவேண்டும் என கருணா அரசாங்கத்தைக் கேட்டிருந்தார் எனவும்,

ஆனால், முன்னர் செய்துகொள்ளப்பட் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பாதகம் ஏற்படும் என எண்ணி அரசாங்கம் கருணாவின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது எனவும் வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை.

கருணா எம்மிடம் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. உண்மைநிலை இவ்வாறிருக்க ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன இவை தவிர்க்கப்படவேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-18)

# கருணாவின் தனிப்பட்ட முடிவு...

படுவதாக அனுமானிக்கிறோம்.

அது எத்தகைய சக்தி என்பதை விரைவிலே காலம் உணர்த்தும் என்று நம்புகிறோம்.

கேள்வி: கருணா, பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்துகொள்ள முடியாது என்று கருதுகிறீர்களா?

பதில்: இந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவருடன் பேசிப் போராடிப் பார்த்தேன்.

என்னையும் இந்தப் பிரச்சினை ஆரம்பமானவுடனேயே தலைவர் இங்கு வருமாறு அறிவித்தல் விடுத்தார். ஆனாலும் நான் இங்கு வருவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இறுதி வரைக்கும் இப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு கண்டு தேசியத் தலைமையின் கீழ் செயற்படுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக கருணாவுடன் அடிக்கடி கதைத்தேன்.

இறுதியாகக் கூட தமிழீழ நிர்வாகத்தை கைவிட்டாலும் கூட தேசியத் தலைமையின் கீழ் செயல்பட வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறேன். அதற்கும் கருணா செவிசாய்க்காது தானே தன்னிச்சையாக நின்று சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு நாங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்கிறோம் என்று ஒரு அறிவிப்பைக் கொடுத்திருந்தார்.

இதன் பின்னர் அவரோடு சமரசம் பேசுவதிலோ அல்லது அவருக்கு மன்னிப்பு கொடுத்து ஒரு சுமூகத் தீர்வை காண்பதிலோ தலைமைப் பீடம் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அதனால்தான் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கியுள்ளது.

எமது கட்டமைப்பின்படி ஒரு தளபதி நீக்கப்பட்டால் அடுத்த தளபதி பொறுப்பேற்று மாவட்டத்தின் போராளிகளையும் மக்களையும் வழி நடத்துகிற செயல்பாடுதான் இருந்து வருகிறது. அதன்படி துணைத் தளபதியாக செயல்பட்ட ரமேஷ் இப்போது தளபதியாக பொறுப்பேற்று மீதமுள்ள போராளிகளையும் பொறுப்பாளர்களையும் வழி நடத்துவதற்கான ஒரு செயற்திட்டம் நடைமுறைப் படுததுவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

அதன் மூலம் ஒரு சுமூகத் தீர்வை காண முடியுமே தவிர கருணாவின் நடவடிக்கைகளை நியாயப் படுத்துவதன் மூலமோ கருணாவிற்கு மன்னிப்பு அளிப்பதன் மூலமோ சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது.

கேள்வி: கருணாவின் தரப்பில் பலதரப்பட்ட கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றனவே..இது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில்: கருணா தெரிவித்துள்ள கருத்துகள் எல்லாம் ஒரு வறட்டுத்தனமான ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துகளாக இருக்கின்றன.

நான் இறுதியாகக் கூட சந்தித்த போது இந்த தமிழீழப் பொறுப்பாளர்கள் மட்டுஅம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எவருமே இல்லை என்ற கட்டமைப்பை வெளிப படுத்தி அதனை மக்களுக்கும் விநியோகித்து எல்லா செய்தி ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தி ஒரு பிரதேசவாதத்தை கிளப்பி தன்னை நியாயப்படுத்த துணிந்திருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன்.

இந்த விடுதலைப் போராட்ட காலத்திலே நாங்களும் பல இடங்களில் கடுமையாக சண்டையிட்டுள்ளோம்.

தகுதிக்கேற்ப தலைமைப் பீடம் பல பொறுப்புகளைக் கொடுத்து வைத்து இருக்கிறது.

போராளிகளும் பல யுத்த களங்களிலே நின்று போரிட்டு எல்லா மக்களது நட்பையும் ஆதரவையும் பெற்றிருக்கிறார்கள்.

இது இன்று நேற்று ஏற்பட்ட சூழல் அல்ல. நீண்ட காலமாகவே அவர் மனதில் குடிகொண்டிருந்த குரோத மனப்பான்மையை வெளிப் படுத்தி இருக்கிறார்.

இந்த வெளிப்பாடு தான் செய்த குற்றச்செயலை மறைப்பதற்காக தன்னை நியாயப்படுத்துவதற்காக இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்துவதன் மூலம் தான் ஒரு சிறந்த தளபதி - தன் மீது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை எமது மாவட்டத்தை, மாவட்ட மக்களை புறக்கணிப்பதாக ஒரு தோற்றப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு வெளிப் படுத்தி தான் ஒரு நிரபராதி. ஆனால், தலைமைப்பீடம்தான் எதிராக இருக்கிறது என்ற கருத்தை மக்கள் மீது திணிக்க முற்பட்டு இருக்கிறார்.

இதன் மூலம் தான் ஒரு பிரதேச விசுவாசி என்பதை காட்ட முனைகிறார். இதில் பலதரப்பட்ட கருத்துகள் தெரிவிக்கப்பட்டாலும் உண்மை இதுதான்.

கேள்வி: இந்த முரண்பாட்டை தீய சக்திகள் பயன்படுத்த முயற்சிப்பது வரலாற்று உண்மை. உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மகளுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?.

பதில்: எமது விடுதலைப் போராட்டத்திலே உலகம் முழுவதும் பரந்து வாழ்கிற தமிழர்கள் மிகுந்த பற்றுறுதியோடும் விசுவாசத்தோடும் நன்றியுணர்வோடும் விடுதலைப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

அவர்கள் கட்டி வளர்த்த இந்த வடுதலைப் போராட்டத்தை சிதைத்து விடுவதற்காக அந்த தீய சக்திகள் முனைவதாக இருந்தால்-அதற்கு பலியாவதாக இருந்தால்-அது ஒரு மாபெரும் தேசத் துரோகமாகவே கருதப்படும்.

அந்தத் தேசத் துரோக நடவடிக்கையாகத்தான் இன்று அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் மக்களிடமிருந்தும் போராளிகளிடமிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டு அடுத்த தளபதி பொறுப்பேற்று அந்த தீயசக்திகளின் முயற்சியை முறியடித்து நிச்சயமாக மட்டக்களப்பு அம்பாறைக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்து மீண்டும் தேசியத் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட அமைப்பாக இயங்குவதற்கு எமது தளபதிகளும் பொறுப்பாளர்களும் உறுதியோடு செயல்பட உறுதி பூண்டிருக்கிறார்கள்.

நிச்சயமாக இன்னும் சொற்ப காலத்தில் அதை தலைமைப் பீடத்திற்கு காட்டுவோம் என்பதை சர்வதேச மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

கேளவி: கருணா நீக்கம் தொடர்பாக சமாதான முன்னெடுப்புகளில் பாதிப்பு ஏற்படுமா?

பதில்: எமது தேசிய விடுதலைப போராட்டம் எமது தேசியத் தலைவரின் கீழ் அணிதிரண்டு அனைத்து போராளிகளும் பொறுப்பாளர்களும் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

தனியொரு மனிதனுக்கு தவறிழைத்தமைக்காக ஒரு ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் அவரது பதவி நிலை பறிக்கப்பட்டால் அது ஒட்டுமொத்தமாக எமது விடுதலைப் போராட்ட அமைப்பின் செயற்பாடுகளுக்கு எந்தவிதமான குந்தகத்தையும் ஏற்படுத்த முடியாது.

சர்வதேச நாடுகளுக்கு எல்லாம் இந்த பேச்சுவார்த்தைக்காக சென்று வந்த கருணா அவர்கள் பல உறுதி மொழிகளையும் எமது தேசியத் தலைமையை-தேசிய விடுதலைப் போராட்டத்தை சர்வதேச மக்களுக்குத் தெளிவுபடுத்தியவர்.

தெளிவுபடுத்திய சொற்ப காலத்திற்குள்ளேயே எமது விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதற்கு அவர் உறுதிபூண்டிருக்கிறார் என்றால் அவரது கொள்கைப் பற்றும் அவருடைய உறுதிமொழிகளும் நிச்சயமாக ஒரு உள்நோக்கத்தை வைத்து அவர் போலியாக நடித்திருக்கின்றார் என்ற உண்மையைத்தான் புலப்படுத்தி இருக்கிறது.

ஆகவே அவருடைய செயற்பாடு நிச்சயமாக வெற்றியளிக்கமாட்டாது. எமது விடுதலைப் போராட்டத்திலே ஒரு மாபெரும் சக்தியாக எமது மக்களும் போராளிகளும் இருக்கிறார்கள்.

ஒரு பொறுப்பாளரையோ ஒரு தளபதியையோ நம்பி இந்த விடுதலைப் போராட்டம் இல்லை.

ஆதலால் ஒட்டுமொத்தமான-பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான தீர்வை எமது மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க நடத்தப்படுகிற இந்த பேச்சுவார்த்தைகள் தனிமனிதன் ஒருவருடைய செயற்பாடும் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையும் எந்த விதத்திலுமே பாதிக்காது.

கேள்வி: கிழக்கில் இருந்து பொறுப்பாளர்கள் வன்னிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டககளப்பு நிலைமை இப்போது எப்படி இருக்கிறது?

பதில்: மட்டக்களப்பு-அம்பாறையில் செயற்பட்டு வந்த முக்கியமான தளபதிகள், துணைத் தளபதி, அரசியல் பொறுப்பாளர், இராணுவப் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர், நிர்வாகப் பொறுப்பாளர் இங்கே வருகை தந்திருக்கிறார்கள்.

அவர்கள் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கான பொறுப்புகளை ஏற்று தொடர்ந்தும் செயற்பட ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த கட்டமைப்பின் கீழ் அவர்கள் செயற்பட தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள். மட்டக்களப்பு-அம்பாறை மக்களும் அதை ஏற்று செயல்பட தயாராக இருக்கின்றார்கள்.

இன்று மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டம் ஒரு மிகுந்த சோக நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது.

தனது விசுவாசமான ஆட்களை வைத்து கருணா பலவிதமான பிரதேச உணர்வுகளை கிளறிவிடக்கூடிய நடவடிககையில் இறங்கிக் கொண்டு இருக்கிறார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு என்ற பேதத்தை மக்கள் மனதிலே ஏற்புடுத்தி மாபெரும் பிரிவினைத் தோற்றத்தை உருவாக்கும் செயலிலே இறங்கியிருக்கிறார். அதற்கு மக்கள் எவருமே சுயமாக ஆதரவு அளிக்கத்தயாராக இல்லை.

கடந்த 30 ஆண்டு காலமாக இரத்தம் சிந்தி கண்ணீர் சிந்தி வளர்த்தெடுத்த இந்த விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட்டு தனது சுயலாபத்தை அடைய முற்படுகிற இந்த நடவடிக்கைக்கு எமது மக்கள் ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டார்கள். அதற்கு விலைபோகவும் மாட்டார்கள்.

அந்த மக்கள் விரும்புவதெல்லாம் இந்த பிரச்சினைகளுக்கு நிரந்தத் தீர்வு காணப்பட்டு மீண்டும் எமது தேசியத் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட அமைப்பாக செயல்பட வேண்டும் என்பதே.

என்னிடம் பலர் கண்ணீர்விட்டு அழுதனர். இந்த நிலைமை எமது மாவட்டத்திற்கு ஏன் ஏற்பட்டது?. இந்த நிலைமையை ஒரு முடிவுக்கு கொண்டுவாருங்கள் என்று கெஞ்சிக் கேட்டார்கள்.

இன்று மக்கள் எப்போதும்போல் எம்முடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இங்கு வந்து எடுத்திருக்கும் இநத முயற்சிக்கு எமது போராளிகளும் பக்கபலமாக நிச்சயமாக இருப்பார்கள்.

கருணாவின் தவறான செயல்களுக்கு ஒத்துழைக்காது அவரை ஓரங்கட்டி எம்மோடு இணைந்து கலந்துவிட்ட விடுதலைப் போராட்டத்தை வழிநடாத்துவதற்கு எமது மக்கள் நிச்சயமாக உழைப்பார்கள் என்ற பெரும் நம்பிக்கை இருக்கிறது.

அண்மையிலே நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்விலே ஆயிரக்கணக்கான மக்கள் எமது தேசியத் தலைவர் உருவப்படத்தை தாங்கிக் கொண்டு புலிகளே தமிழர்! தமிழரே புலிகள்!! என்ற கோஷத்தை எழுப்பி வந்தமை அவர்களது உணர்சசியையும் உத்வேகத்தையும் வெளிக்காட்டக் கூடியதாக இருந்தது.

இந்த உணர்ச்சியையும், உத்வேகத்தையும் ஒரு சிலநாட்களில் ஒரு கருணாவின் சுயநலத்துக்காக பயன்படுத்துவதை எந்தவொரு மக்களும் அனுமதிக்கப் போவதில்லை. அதற்கு அவர்கள் உடன்படவும் மாட்டார்கள்.

இந்த 30 ஆண்டுகாலம் தேசிய உணர்வையும் தேசியத் தலைமை விசுவாசத்தையும் காட்டிவிட்டு ஓரிரு நாட்களிலே அதனை தூக்கி எறிந்துவிட்டு அதற்கு எதிராக செயற்படுங்கள் என்று கோசமிடுவது நகைப்பிற்கிடமானது-கேலிக்கூத்தானது-போலித்தனமானது. இதற்கு மட்டக்களப்பு-அம்பாறை மக்கள் செவிசாய்க்கமாட்டார்கள்.

இதற்கு நிச்சயமாக ஒரு பதிலடி கொடுத்து தொடர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களோடு செயற்படுவதற்கு உறுதிபூணுவார்கள் என்பதை நிச்சயமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கேள்வி: தேர்தல் தொடர்பாக..?

பதில்: தமிழ்த் தேசியத்தையும் விடுதலைப் புலிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டையும் நியாயப்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளை முழு தமிழ் உலகமே ஏற்றுக்கொள்வதறகான மீண்டும் ஒரு தீர்வை உறுதிப்படுத்துக்கிற தேர்தல் இது.

புலிகள் தான் மக்கள்- மக்கள் தான் புலிகள் என்று மட்டக்களப்பிலே போட்டியிடுகிற ஒவ்வொரு வேட்பாளர்களும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இதில் எந்த மாற்றமும் இல்லை. அந்த கொள்கைக்கே வாக்களிக்க எம்மக்களும் தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளையே ஏகப் பிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் தமிழ்த் தேசியத்தை நாங்கள் மீண்டும் ஒருமுறை உணர்த்திக் காட்ட வேண்டும் என்ற உறுதியோடு மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் மக்கள் வாக்களிக்கத் தயாராகி வருகின்றனர்.

இன்று இடம்பெற்றுள்ள சலசலப்புச் சூழல் எமது மக்களின் உணர்வலைகளை எந்த விதத்திலும் பாதிக்காது.

தேர்தலிலும் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

நிச்சயமாக தேர்தலில் மக்கள் எமது தமிழ்த் தேசியத்தையும் விடுதலைப் புலிகளே ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் வெளிப்படுத்துகிற முடிவை அவர்கள் அறிவித்து மிகப்பெரிய வெற்றியை அளிக்க உறுதிபூணுவார்கள்.

இக்கட்டான சூழலில் விடுதலைப் புலிகளின் பலத்தை நிரூபிக்க ஒவ்வொரு தமிழ் வாக்காளரும் உறுதியோடு செயல்படுவார்கள் என்று நாம் நம்புகிறோம். தேர்தல் முடிவு மூலம் அவர்கள் நிரூபிப்பார்கள்.

கேள்வி: தேசியத் தலைவர் அவர்கள் தன்னை கொல்லத் திட்டமிட்டுள்ளார் என்று மேற்கத்திய ஊடகங்களிடம் கருணா கூறியுள்ளாரே?

பதில்: இது தன்னுடைய பலவீனத்தை நியாயப்படுத்துவதற்கான குற்றச்சாட்டு. தான் செய்த தவறு அம்பலப்படுத்தப்பட்டு உலக மக்களால் அவரது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு அவர் ஒரு குற்றவாளியாக்கப்பட்டுவிடுவாரோ.. தமிழ் மக்களின் துரோகியாகப் பார்க்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவருக்குக் குடிகொண்டுள்ளது.

இதனால் பொய்யான தகவல்கள் மூலம் தன்னை நியாய் படுத்திக்கொள்ள முனைகிறார்.

இன்றும், எமது தேசியத் தலைவர் அவர்கள் கருணாவை மன்னித்து அவர் வாழ்நாள் முழுவதும் உயிரோடு வாழ்வதற்கான முடிவுகளை எடுத்துள்ளார்.

கருணா விரும்பினால் அதை நிறைவேற்றி எந்தவித துன்பங்களுமின்றி அவரது உயிருக்கு எவ்வித ஆபத்துமின்றி அவரை சுதந்திரமாக செயற்படுவதற்கான உறுதிமொழிகளையும் ஏற்பாடுகளையும் செய்ய அவர் தயாராக இருக்கிறார் என்பதை உலகத் தமிழர்களுக்கு அனைத்து ஊடகங்கள் ஊடாகத் தெரிவிக்கிறோம். இதனை அவர் நம்பலாம். இதற்கான உறுதியை தேசியத் தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார் என்பதையும் தெரியப்படுத்துகிறோம். (த)